தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.06.2013**

**பட்ஜெட் கூட்டத்துக்குப் பின்னர் வறட்சி நிவாரணம்'**

புதுவை சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்தவுடன் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்றார் புதுவை முதல்வர் என். ரங்கசாமி.

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத் தலைவராக ஏ. சுரேஷ் வெள்ளிக்கிழமை மாலை பொறுப்பேற்றார். இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற பின் முதல்வர் என். ரங்கசாமி அளித்த பேட்டி :

இந்த நிலையத்தில் ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு பணிகளை தீவிரமாக மேற்கொள்ளும் வகையில் அதன் தரத்தை உயர்த்த அரசு தேவையான நிதியுதவி அளிக்கும். மத்திய திட்டக்குழு புதுவைக்கு நிதி ஒதுக்கியுள்ளது. இதைக் கொண்டு பட்ஜெட் தாக்கல் செய்யப்படும். இந்த பட்ஜெட்டில் கல்வி, வேளாண்மை, பொதுப்பணித்துறை, சுகாதாரத் துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும். காரைக்காலில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையுடன் கூடிய மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டு விழா விரைவில் நடக்கும்.

காரைக்கால் மாவட்ட விவசாயிகளுக்கு பட்ஜெட் கூட்டத் தொடருக்குப் பிறகு வறட்சி நிவாரணத்தை அரசு வழங்கும் என்றார் முதல்வர் ரங்கசாமி.

**பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் திறப்பு**

பெரியாறு அணையிலிருந்து தமிழகத்துக்கு முதல்போக பாசனத்துக்காக தண்ணீரை, மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார்.

தேக்கடியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சார்பில், இந்து மற்றும் இஸ்லாமிய முறைப்படி சிறப்புப் பூஜை, வழிபாடுகள் செய்யப்பட்டன. இதில், மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் விஜயாராணி ஆகியோர் கலந்துகொண்டு, அணையில் மலர் தூவினர்.

மேலும், பெரியாறு-வைகை கண்காணிப்புப் பொறியாளர் ராஜேஷ், கம்பம் நகராட்சித் தலைவரும், அதிமுக மாவட்டச் செயலருமான டி. சிவக்குமார், அணையின் செயற் பொறியாளர் மாதவன், உதவி செயற்பொறியாளர் கல்யாணசுந்தரம் ஆகியோரும், வைகை பெரியாறு செயற் பொறியாளர் தனபால், உதவி செயற்பொறியாளர் அன்புச்செல்வன், உதவிப் பொறியாளர் சந்தனக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். பின்னர், தேக்கடியில் உள்ள பெரியாறு அணையிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் செல்லும் சுரங்கத்தின் மதகை, ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி திறந்து வைத்தார்.

தற்போது, அணையின் நீர்மட்டம் 124.70 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 3,559 கனஅடியாக உள்ளது, தமிழகத்துக்கு வைகை அணை, குடிநீர் மற்றும் பாசனத்துக்கு விநாடிக்கு மொத்தம் 1,322 கனஅடி தண்ணீர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 2,288 மில்லியன் கனஅடியாக இருந்தது.

கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக பாசனம்: மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் பதிவு பெற்ற உத்தமபாளையம், போடி மற்றும் தேனி வட்டங்களைச் சேர்ந்த 14,707 ஏக்கர் நிலத்தின் முதல்போக பாசனத்துக்கும், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் குடிநீருக்காகவும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் 120 நாள்களுக்கு தொடர்ந்து திறந்துவிடப்படும் என, பொதுப் பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

லோயர் கேம்ப்-பெரியார் நீர் மின் உற்பத்தி துவக்கம்: லோயர் கேம்ப்-பெரியார் மின் உற்பத்தி நிலையத்தில், கடந்த மார்ச் முதல் வாரத்தில் மின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வந்தன. தற்போது, அணையிலிருந்து சுரங்கத்தின் வழியாக திறந்துவிடப்படும் தண்ணீர் போர்-பை அணையிலிருந்து, வால்வு கௌஸ் மூலம் ராட்சத குழாய் வழியாகச் சென்று மின் உற்பத்தி செய்யப்பட்டு, பின்னர் லோயர் கேம்ப் பெரியாற்றில் தண்ணீர் விடப்படுகிறது. வெள்ளிக்கிழமை முதல் கட்டமாக, 4 ஜெனரேட்டர்களில் 3 ஜெனரேட்டர் மட்டும் இயக்கப்பட்டு, விநாடிக்கு 109 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி துவங்கப்பட்டது.

ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி கூறுகையில், தமிழக முதல்வர் உத்தரவின்படி, முல்லைப் பெரியாறு அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான விதை, இடுபொருள்கள் இருப்பில் உள்ளதாகவும் தெரிவித்தார். நிகழ்சியில், கம்பம் பள்ளத்தாக்கு விவசாய சங்கத் தலைவர் தர்வீஸ் முகைதீன், பெரியாறு நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் ஓ.ஆர். நாராயணன், 5 மாவட்ட விவசாய சங்கத் தலைவர் கே.எம். அப்பாஸ், 18 ஆம் கால்வாய் விவசாய சங்கப் பிரதிநிதிகள், தென்னை விவசாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

**தொடர் சாரல் மழையால் அறுவடை செய்த சோளப் பயிர்கள் முளைப்பு**

போடியில் தொடர் சாரல் மழையால் அறுவடை செய்த சோளப் பயிர்கள் முளைத்ததால் விவசாயிகளுக்கு பல லட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்கள் கவலையடைந்துள்ளனர்.

போடி, துரைராஜபுரம், மீனாட்சிபுரம், பொட்டல்களம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பில் சோளம் பயிர் செய்யப்பட்டுள்ளது. நன்கு விளைந்த சோளப் பயிர்கள் அறுவடை கடந்த சில தினங்களுக்கு முன் துவங்கியது. இவ்வாறு அறுவடை செய்யப்பட்ட சோளக் கதிர்களை நன்கு உலர்த்தி, காயவைத்து பின்னர் இயந்திரம் மூலம் கதிர் அடித்து, தானியங்களை பிரிப்பது வழக்கம்.

இந்நிலையில் கேரளப் பகுதியில் தென் மேற்கு பருவ மழை தொடர்ந்து பெய்து வருகிறது. அதன் சாரல் மழை போடியிலும் தொடர்ந்து பெய்து வருகிறது. இதில் விவசாய நிலங்களில் காய வைத்திருந்த சோளக் கதிர்கள் நனைந்தன. இதனால் அவை முளைத்துவிட்டன.

மேலும் பல கதிர்கள் தொடர் மழையால் கருத்து நிறம் மாறிவிட்டன. நிலத்தை பண்படுத்தி, உரமிட்டு, சோள நாற்றுக்களை நட்டு ஏக்கர் ஒன்றுக்கு சுமார் ரூ.50 ஆயிரம் வரை விவசாயிகள் செலவு செய்திருந்த நிலையில் தொடர் சாரல் மழையால் கதிர்களை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. இதனால் விவசாயிகள் கடும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

போடி பகுதியில் சோளம் பயிரிட்டிருந்தோருக்கு பல லட்ச ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதுகுறித்து துரைராஜபுரம் காலனியைச் சேர்ந்த விவசாயி ராமுத்தாய் கூறியதாவது: கடன் வாங்கியும், நகைகளை அடகு வைத்தும் விவசாயம் செய்திருந்தோம். அறுவடையானதும் கடனை அடைத்துவிடலாம் என்றிருந்தோம்.

தற்போது அறுவடை செய்து பலன்களை அடைய இருந்த நேரத்தில் மழையால் மகசூல் அடைய முடியாமல் உள்ளோம்.

இதனால் கடனை அடைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அரசு எங்களது நிலையை அறிந்து உரிய நிவாரணம் வழங்க முன்வர வேண்டும் என கவலையுடன் தெரிவித்தார்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி**

சிவகங்கையில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

சிவகங்கை நகராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை வலியுறுத்தி நடைபெற்ற இப்பேரணியை நகர்மன்றத் தலைவர் எம்.அர்ச்சுணன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பள்ளி மாணவ, மாணவியர், நகராட்சி அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்ற இப்பேரணி ராமச்சந்திரா பூங்காவில் துவங்கி அரண்மனைவாசலில் நிறைவு பெற்றது.

**குறுவை நெல் சாகுபடிக்காக அமராவதி அணை திறப்பு**

குறுவை நெல் சாகுபடிக்காக உடுமலை அமராவதி அணை வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. இதன் மூலம் பழைய ஆயக்கட்டு பாசன பகுதியில் உள்ள 7,250 ஏக்கர்கள் பாசன வசதி பெறுகின்றன.

அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் வரையில் மூன்று மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

சில வாரங்களாக அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் மள, மளவென உயர்ந்தது. இதை தொடர்ந்து, கடந்த ஒரு மாதத்தில் மட்டும் குடிநீருக்காக மூன்று முறை அணை திறந்து விடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் புதிய ஆயக்கட்டு பாசன நிலங்கள் 25,250 ஏக்கருக்கு தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. இந் நிலையில், முதல்வரின் உத்தரவின்பேரில் பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கு வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் மேல் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தானியங்கி பொத்தானை அழுத்தி, வனத் துறை அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் அணையை திறந்து வைத்தார்.

இவ் விழாவில் திருப்பூர் ஆட்சியர் மதிவாணன், மடத்துக்குளம் எம்எல்ஏ சி.சண்முகவேலு, உடுமலை கோட்டாட்சியர் வே.லதா, மாவட்ட ஊராட்சித் தலைவர் மு.சண்முகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து பொதுப் பணித்துறை அதிகாரிகள் செய்தியாளர்களிடம் கூறியது:

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, வினாடிக்கு 300 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மூலம் உடுமலையில் 1,450 ஏக்கரும், தாராபுரம் வட்டத்தில் 6,070 ஏக்கரும் என மொத்தம் 7,250 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இதன் மூலம் மொத்தம் 2,462 மில்லியன் கன அடி தண்ணீர் தவணை முறையில் மொத்தம் 135 நாள்களுக்கு திறந்து விடப்படும். கல்லாபுரம் வாய்க்காலில் 25 கன அடி தண்ணீரும், ராமகுளம் வாய்க்காலில் 25 கன அடி தண்ணீர் தொடர்ந்து கொடுக்கப்படும் என்றனர்.

அணையின் நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் வெள்ளிக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி 48.39 அடி நீர் இருப்பு இருந்தது. 4,035 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணையில் 1096.63 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருந்தது. அணைக்கு

உள்வரத்தாக 1132 அடி வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 1,751 கன அடி வெளியேறிக் கொண்டிருந்தது.

**காய்கறிகளின் விலை சரிவு**

வெள்ளக்கோவிலில் சில நாள்களாக காய்கறிகளின் விலை சரிவை சந்தித்து வருகிறது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

வெளியூர்களிலிருந்து அதிக வரத்து இருப்பதால், காய்கறி விலையில் சரிவு ஏற்பட்டு வருவதாக கடைக்காரர்கள் தெரிவிக்கின்றனர். மொத்த விலை விவரம் வருமாறு (கிலோ):

சின்ன வெங்காயம்-ரூ.40,பெரிய வெங்காயம்-ரூ.22, தக்காளி-ரூ.25, கத்தரி-ரூ.18, வெண்டை-ரூ.23, பீட்ரூட், கேரட்-ரூ.28, பீன்ஸ் ரூ.35. இந்த விலை சரிவு தற்காலிகமானதுதான், வரும் நாள்களில் விலையில் ஏற்றம் இருக்குமென வியாபாரிகள் தெரிவித்தனர்.

**கொடிவேரி அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

ஈரோடு மாவட்டம், கோபி வட்டத்துக்கு உள்பட்ட கொடிவேரி அணையிலிருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி முதல் போக பாசனத்துக்கு வெள்ளிக்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

முதல்வர் ஜெயலலிதா உத்தரவுப்படி, வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம், முன்னாள் வருவாய்த் துறை அமைச்சரும், கோபி சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினருமான கே.ஏ.செங்கோட்டையன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் முன்னிலையில் கொடிவேரி அணையிலிருந்து தண்ணீர் திறந்தனர்.

இந்த அணை ஈரோடு மாவட்டத்தில் சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. அணையின் இடதுபுறம் அரக்கன்கோட்டை கால்வாயும், வலதுபுறத்தில் தடப்பள்ளி கால்வாயும் அமைந்துள்ளன. இந்த இரண்டு கால்வாய்களின் மூலமாக 24,504 ஏக்கர் பாசனப் பரப்பு பயன்பெறுகிறது. அரக்கன்கோட்டை கால்வாயின் மொத்த

கொள்ளளவு 1 வினாடிக்கு 379 கன அடி. தடப்பள்ளி கால்வாயின் மொத்த கொள்ளளவு 1 வினாடிக்கு 735 கன அடி.

நிகழ்ச்சியில் அந்தியூர் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் எஸ்.எஸ்.ரமணீதரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எஸ்.ஆர்.செல்வம், கோபி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சத்தியபாமா வாசு உள்பட பலர் பங்கேற்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 59.26 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 59.26 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 7,020 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 600 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 7.85 டி.எம்.சி.

**விவசாயிகள் இடையே கருத்து வேறுபாடு**

வேளாண் குறைகேட்புக் கூட்டத்தில் விவசாயிகள் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் கூட்டம் பாதியில் ஒத்திவைக்கப்பட்டது.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சு.கணேஷ் தலைமை வகித்தார்.

கூட்டம் தொடங்கியதும் கீழ்பவானி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்க அரசு ஆய்வு செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுகுறித்து கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் என்றனர்.

இதற்கு பதில் அளித்த வருவாய் அலுவலர் கணேஷ், இதுதொடர்பாக தங்களது கருத்தை பதிவு செய்யும் வகையில் மனு அளிக்கலாம் என்றார். இதைத்தொடர்ந்து விவசாயிகள்

மனு அளித்தனர். இருப்பினும், மாவட்ட ஆட்சியர் நேரில் வர வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

இதையடுத்து அங்கு வந்த ஆட்சியர் வே.க.சண்முகம், கீழ்பவானி விவசாயிகள் தங்களது கருத்துக்களை தெரிவிக்க அனுமதி அளித்தார்.

அப்போது பேசிய கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கத் தலைவர் செ.நல்லசாமி, காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, பவானிசாகர் அணையில் இருந்து அனைத்துப் பாசனங்களுக்கும் ஒரே நேரத்தில் தண்ணீர் திறக்க வேண்டும். கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கக்கூடாது என்றார்.

இதற்கு தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து இரு தரப்பினர் இடையே சலசலப்பு ஏற்பட்டது. அப்போது குறுக்கிட்ட ஆட்சியர் வே.க.சண்முகம், விவசாயிகளிடையே கருத்து வேறுபாடு அதிகமாக உள்ளது.

இந்த நேரத்தில் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தினால் சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்படும். எனவே, கூட்டத்தை ஒத்திவைப்பதாகக் கூறிவிட்டு வெளியேறினார். அவரை தொடர்ந்து அதிகாரிகள் அனைவரும் கூட்டத்தில் இருந்து வெளியேறினர். ஆனால் ஒரு தரப்பு விவசாயிகள் மட்டும் நீண்ட நேரம் காத்திருந்து, பின்னர் கிளம்பிச் சென்றனர்.

**வேலூரில் இடியுடன் பலத்த மழை**

வேலூர் மாநகரில் இடியுடன் கூடிய மழை வெள்ளிக்கிழமை மாலை பெய்தது. சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக பெய்த இந்த மழையில் நகரின் பல தெருக்களில் நீர் தேங்கத் தொடங்கியது.

வேலூர் தெற்கு காவல் நிலையம் அருகே மழைநீர் தேங்கியதால், அப்பகுதி வழியாக வாகனங்கள் மிதந்து சென்றன. அதேபோல் வேலூர் புதிய பஸ் நிலையப் பகுதி, பழைய பஸ் நிலையப் பகுதி, வேலூர் கோட்டை பஸ் நிறுத்தப் பகுதிகளில் தண்ணீர் தேங்கியது.

தொரப்பாடி, காந்தி சாலை, சுண்ணாம்புக்கார தெரு உள்ளிட்ட இடங்களில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட பள்ளங்களில் தண்ணீர் தேங்கியதால் பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாயினர்.

**விவசாயிகளிடம் வங்கிகள் கெடுபிடி காட்டக்கூடாது: ஆட்சியர்**

விவசாயிகளிடம் வங்கிகள் கெடுபிடி காட்டக்கூடாது என்றார் மாவட்ட ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன்.

திருச்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்துக்குத் தலைமை வகித்து, விவசாயச் சங்கப் பிரதிநிதிகளின் கேள்விகளுக்குப் பதிலளித்து அவர் மேலும் பேசியது:

கடன் தொகையை வசூலிப்பதாகக் கூறி விவசாயிகளிடம் வங்கிகள் கெடுபிடி காட்டக்கூடாது. இதுகுறித்து வங்கியாளர்கள் கூட்டம் கூட்டப்பட்டு அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. விவசாய நோக்கத்துக்கு வண்டல் மண் எடுப்பதாகக் கூறப்பட்டு, அதை வணிக நோக்கத்துக்காகப் பயன்படுத்தினால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள், இளைஞர்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் சிறுதானியங்கள் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சி ஒன்றை விரைவில் நடத்த உள்ளோம் என்றார் ஆட்சியர்.

மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ராமதாஸ்: விவசாயிகள் வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை நீண்டக் கால கடனை தவணை முறையில் செலுத்தலாம். விவசாயிகளிடம் எந்தவித ஜப்தி நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது. பொருளாதார வசதி உள்ள விவசாயிகள் தங்கள் கடன் தொகையை ஒரே தவணையில் செலுத்தி தீர்வு செய்து கொள்ளலாம்.

சிறு,குறு விவசாயிகளின் கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், பெரிய விவசாயிகள் வங்கியில் வாங்கிய கடன் தொகையில் 25 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்பட்டது போக, மீதமுள்ள 75 சதவிகித கடன் தொகையை வட்டியுடன் கட்ட

வேண்டும். ஆனால் இத்தொகையை விவசாயிகள் கட்ட மறுத்ததால், தற்போது அத்தொகையை செலுத்த வேண்டியதுள்ளது என்றார் ராமதாஸ்.

மண்டலக் கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ராஜேந்திர பிரசாத்: திருச்சி மாவட்டத்தில் நிகழாண்டில் விவசாயிகளுக்கு ரூ.180 கோடி பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு வங்கிகளில் வட்டியில்லா கடனாக வழங்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன்களை மத்தியக் காலக் கடன்களாக மாற்றிக் கொள்ளலாம். கடன்தொகையை முழுமயாகச் செலுத்தினால் விவசாயிகளுக்கு புதிய கடன் வழங்கப்படும் என்றார் அவர்.

**இன்று விலையில்லா ஆடு, மாடுகளுக்கான மருத்துவ முகாம்**

அரியலூர் மாவட்டத்தில் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கிய கிராமங்களில் சிறப்பு மருத்துவ முகாம் சனிக்கிழமை (ஜூன் 29) நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழக அரசின் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2011-12-ம் ஆண்டிற்கு, அரியலூர் மாவட்டத்தில் 150 கறவைப் பசுக்களும், 7,624 வெள்ளாடுகளும், 2012-13-ம் ஆண்டிற்கு 150 கறவைப்பசுக்களும், 10,372 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அரியலூர் மாவட்டத்திலுள்ள விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கிய கிராமங்களில் சனிக்கிழமை (ஜூன் 29) சிறப்பு முகாம் நடைபெற உள்ளதால், பயனாளிகள் தங்களது கால்நடைகளை முகாமிற்கு கொண்டு வந்து உரிய சிகிச்சை பெற்று செல்லலாம் என்றார் அவர்.

**"பயிர்க் கடன் கூடுதல் வட்டியை அரசே ஏற்க வேண்டும்'**

ஒத்திவைக்கப்பட்ட பயிர்க் கடன்களுக்கான கூடுதல் வட்டியை அரசு ஏற்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் பேசியது :

எஸ். சம்பந்தம் : அரிச்சந்திரா நதி முகத்துவாரத்தில் கடல் நீர் உள்புகுந்து நிலத்தடி நீர் உவர் நீராக மாறுவதைத் தடுக்க முதலியப்பன் கண்டி பகுதியில் தடுப்பணையும், வேதாரண்யம் கால்வாய்க்கு அருகே ஏரியும் அறிவிப்பாக மட்டுமே உள்ளன. எப்போது அமைக்கப்படும்.

சா.வீ. ராமகிருஷ்ணன் : நாகை மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் நிலத்தடி நீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அதிகளவில் உழவு மானியம் மற்றும் டீசல் மானியம் வழங்க வேண்டும்.

கோபி. கணேசன் : பொறையாறு பகுதியில் பராமரிப்புப் பணி என்ற பெயரில் அறிவிக்கப்படாத மின் வெட்டு அமலில் உள்ளது.

ஏ. அலெக்ஸாண்டர் : குத்தாலத்தில் உள்ள தனியார் இரும்பு உருக்காலையிலிருந்து வெளியாகும் கரும்புகையால் அருகில் உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள், சுவாசக் கோளாறு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோதண்டராமன் : சீர்காழி புதுமண்ணியாறு 3 ஆண்டுகளாக தூர்வாரப்படாமலிருப்பதால் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. உடனடியாகத் தூர்வார வேண்டும்.

வி. தனபாலன் : நிலம் புயல் மற்றும் வெள்ளச் சேத சீரமைப்புக்காக ரூ. 3.6 கோடிக்கும் அதிகமான தொகையில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் பட்டியல் கோரி 3 மாதங்களாக வலியுறுத்தியும் வழங்கப்படவில்லை. பணிகள் நடைபெறாமலேயே நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவுக் கடன்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், பயிர்க் கடனுக்கான வட்டி வீதம் 8-லிருந்து 10 சதமாக உயர்த்தப்படும். இதனால், விவசாயிகளுக்கு ஏற்படும் கூடுதல் வட்டிச் சுமையை அரசே ஏற்க வேண்டும்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், என்.பி.கே.ஆர்.ஆர் கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அலுவலர் ஜி. விஜயா, வேளாண் துறை இணை இயக்குநர் உ. ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பட்ஜெட் கூட்டத்துக்குப் பின்னர் வறட்சி நிவாரணம்**

புதுவை சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்தவுடன் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்றார் புதுவை முதல்வர் என். ரங்கசாமி.

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத் தலைவராக ஏ. சுரேஷ் வெள்ளிக்கிழமை மாலை பொறுப்பேற்றார். திருநள்ளாறு அருகே உள்ள இந்த நிலையத்தில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த புதுவை முதல்வர் என். ரங்கசாமி அளித்த பேட்டி :

இந்த நிலையத்தில் ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு பணிகளை தீவிரமாக மேற்கொள்ளும் வகையில் இதன் தரத்தை உயர்த்த அரசு தேவையான நிதியுதவி அளிக்கும்.

மத்திய திட்டக்குழு புதுவைக்கு நிதி ஒதுக்கியுள்ளது. இதைக்கொண்டு பட்ஜெட் தாக்கல் செய்யப்படும். இந்த பட்ஜெட்டில் கல்வி, வேளாண்மை, பொதுப்பணித் துறை, சுகாதாரத் துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

காரைக்காலில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையுடன் கூடிய மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டு விழா விரைவில் நடக்கும். காரைக்கால் மாவட்ட விவசாயிகளுக்கு பட்ஜெட் கூட்டத் தொடருக்குப் பிறகு வறட்சி நிவாரணத்தை அரசு வழங்கும். அரசின் நிதி நெருக்கடிகள் சீரான பிறகு ஊழியர்கள் பணி நியமனம் நடைபெறும் என்றார் முதல்வர் ரெங்கசாமி.

முன்னதாக நடைபெற்ற நிகழ்ச்சியில் நலத்துறை அமைச்சர் பி. ராஜவேலு, பேரவை உறுப்பினர் பி.ஆர். சிவா, மாவட்ட ஆட்சியர் (பொ) அ. முத்தம்மா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர

**மேட்டூர் நீர்மட்டம் ஒரே நாளில் 2.68 அடி உயர்வு**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2.68 அடி உயர்ந்தது.

கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் பலத்த மழையால் அங்குள்ள அணைகள் நிரம்பின. இதையடுத்து, கபினி அணையிலிருந்து நொடிக்கு 35 ஆயிரம் கன அடி உபரிநீர் வெளியேற்றப்படுகிறது.

இதனால், மேட்டூர் அணைக்கு கடந்த 4 நாள்களாக நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நொடிக்கு 80 கன அடியாக இருந்த நீர்வரத்து, வெள்ளிக்கிழமை காலை 9,523 கன அடியாக அதிகரித்தது.

அதேபோல் வியாழக்கிழமை 16.91 அடியாக இருந்த நீர்மட்டம், வெள்ளிக்கிழமை 19.59 அடியாக உயர்ந்துள்ளது. அதாவது நீர்மட்டம் ஒரே நாளில் 2.68 அடி உயர்ந்துள்ளது.

இதற்கிடையே அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 900 கன அடியில் இருந்து 1,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நீர்வரத்து அதிகரித்ததால் பண்ணவாடி, கோட்டையூர் பரிசல் துறைகளில் பரிசல் இயக்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

பரிசல்கள் இயக்கப்படாததால் பரிசல் துறை வெறிச்சோடிக் காணப்பட்டது.

மேட்டூர் அணையில் தண்ணீர் குறைந்தபோது வெளியே தெரிந்த மரங்கள் வெள்ளிக்கிழமை மீண்டும் நீரில் மூழ்கின.

**ஒகேனக்கல்லில் நீர்வரத்து 35 ஆயிரம் கன அடியாக உயர்வு**



ஒகேனக்கல்லில் நீர்வரத்து வெள்ளிக்கிழமை இரவு நிலவரப்படி நொடிக்கு 35 ஆயிரம் கன அடியை எட்டியுள்ளது. இதனால், தொங்குபாலம் மற்றும் அருவிகளில் குளிக்கச் செல்லும் பகுதிகளுக்கு "சீல்' வைக்கப்பட்டது.

இதனால், பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

"ஆசியாவின் நயாகரா' என்றழைக்கப்படும் ஒகேனக்கல்லுக்கு பல்வேறு மாவட்டங்கள் மற்றும் கர்நாடகம், ஆந்திரம், புதுவை உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் தினமும் வருகை தருகின்றனர்.

கேரளம், கர்நாடகத்தில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் தொடர் மழையாலும், காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்யும் பலத்த மழையாலும் கர்நாடகத்திலுள்ள அணைகள் நிரம்பின. இதனால், கபினி அணையிலிருந்து நொடிக்கு 35 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கர்நாடகத்திலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீரின் அளவை தமிழக- கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வள ஆணைய அலுவலர்கள் தினமும் கணக்கிட்டு மத்திய, மாநில அரசுகளுக்கு அறிக்கை அனுப்பி வருகின்றனர்.

வெள்ளிக்கிழமை மாலை நிலவரப்படி நொடிக்கு 31 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து இரவில் 35 ஆயிரம் கன அடியை எட்டியது.

நீர்வரத்து அதிகரித்திருப்பதால் ஒகேனக்கல்லுக்கு செல்லும் நடைபாதையிலும் தண்ணீர் செல்கிறது. தொங்கு பாலத்துக்கு சீல் வைத்த வருவாய்த் துறையினர், போலீஸார் சுற்றுலாப் பயணிகளை தடுத்து திருப்பி அனுப்பினர்.

பரிசல்கள் நிறுத்தம்: வெள்ளம் பெருக்கெடுத்ததைப் போன்று தண்ணீர் செல்வதால் மாமரத்துக்கடவு, கோத்திக்கல், ஊட்டமலை, ஒகேனக்கல் சத்திரம் ஆகிய பகுதிகளில் உள்ள பரிசல் துறைகளில் அனைத்துப் படகுகளும் அப்படியே நிறுத்தப்பட்டுள்ளன. மேலும், பரிசலில் செல்லவும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. ஒகேனக்கல்லில் உள்ள மீன் கடைகள், இதர கடைகள் அனைத்தும் விற்பனையின்றி காணப்படுகின்றன.

**தமிழகத்தில் இன்றும் மழை வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையில் சனிக்கிழமை (ஜூன் 29) பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை காரணமாக மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிக்கு அருகில் உள்ள தமிழக மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், தமிழகம், புதுவையில் ஆங்காங்கே மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணிநேர நிலவரப்படி மயிலாடுதுறையில் 100 மி.மீ. மழை பெய்துள்ளது. வால்பாறை, சின்னக்கல்லாறு, நடுவட்டம், இளையான்குடி (30 மி.மீ.), சென்னை, கடலூர், புதுச்சேரி, செங்கல்பட்டு, மகாபலிபுரம், விருத்தாசலம், அருப்புக்கோட்டை (20 மி.மீ.), கல்பாக்கம், ஸ்ரீபெரும்பூதூர், செம்பரம்பாக்கம் (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

**மின் உற்பத்தி, உரத் தொழிற்சாலைகளுக்கு மானிய விலையில் எரிவாயு**



மின்சாரம் மற்றும் உரத் தொழிற்சாலைகளுக்கு மானிய விலையில் எரிவாயு வழங்கப்படும் என மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் சூசகமாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சிதம்பரம் வெள்ளிக்கிழமை கூறியதாவது:

எரிவாயு விலை உயர்வால் மின்சாரம் மற்றும் உரத்தின் விலையை அதிகரிக்க வேண்டியிருக்கும் என மத்திய எரிசக்தி மற்றும் உரத்துறை அமைச்சகங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இப்போது எரிவாயு உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டிய விலை மட்டுமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் மற்றும் உரம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் எரிவாயுவுக்கு செலுத்த வேண்டிய விலை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

மின்சாரம் மற்றும் உரம் ஆகியவை நியாயமான விலையில் கிடைப்பதை அரசு உறுதி செய்யும். மின்சாரம் மற்றும் உர உற்பத்தி நிறுவனங்களுக்கு குறைவான விலையில் எரிவாயு வழங்குவதா அல்லது மானியம் வழங்குவதா என்பது குறித்து ஆலோசிக்கப்படும். வரும் ஏப்ரல் மாதத்துக்குள் இதுகுறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

தனியார் நிறுவனங்கள் பயன் பெறுவதற்காக எரிவாயு விலையை உயர்த்துவதாகக் கூறுவது தவறு. யாருடைய நிர்ப்பந்தத்தின் பேரிலும் எரிவாயு விலையை அரசு உயர்த்தவில்லை.

தேவை அதிகரித்து வருவதால், கூடுதலாக எரிவாயுவை உற்பத்தி செய்ய வேண்டி உள்ளது. இதற்காக முதலீடு அதிக அளவில் தேவைப்படுகிறது. இதுபோன்ற இப்போதைய பொருளாதார சூழலை கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றார் சிதம்பரம்.

மத்திய பெட்ரோலிய அமைச்சர் வீரப்ப மொய்லி கூறியது: எரிவாயு விலை உயர்வு பொதுத்துறை மற்றும் தனியார் துறை உற்பத்தியாளர்கள் அனைவருக்கும் பொருந்தும். மொத்த உள்நாட்டு எரிவாயு உற்பத்தியில் பொதுத் துறை நிறுவனமான ஓஎன்ஜிசியின் பங்கு 3ல் 2 பங்காக உள்ளது. எனவே, அரசுக்குதான் அதிக பயன் கிடைக்கும் என்றார்.

பெட்ரோலியத் துறை செயலாளர் விவேக் ரே கூறியது: எரிவாயு விலை உயர்வால் மின்சாரம் மற்றும் உர உற்பத்தித் துறைக்கு ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் கோடி கூடுதல் செலவாகும். இதில் ராயல்டி, வரி மற்றும் லாபம் ஆகிய வழிகள் மூலம் அரசுக்கு ரூ.3 ஆயிரம் கோடி வருமானம் கிடைக்கும். விலையை உயர்த்துவதன் மூலம் உற்பத்தி

அதிகரிக்கும் என்பதால் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றார்.

உற்பத்தி குறைந்தது: கடந்த 2010-11 நிதியாண்டில் உள்நாட்டு எரிவாயு உற்பத்தி நாள் ஒன்றுக்கு 14.31 கோடி ஸ்டாண்டர்டு கன மீட்டராக இருந்தது. இது 2012-13இல் 11.14 கோடியாகக் குறைந்துள்ளது. அதேநேரம் எரிவாயு இறக்குமதி 30 சதவீதம் அதிகரித்துள்ளது. உள்நாட்டு உற்பத்திக்கான விலையை உயர்த்தாவிட்டால் இறக்குமதி மேலும் அதிகரித்து பொருளாதாரத்தில் பின்னடைவை ஏற்படுத்தும் என சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் வியாழக்கிழமை கூடிய பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக்குழு, இறக்குமதி செய்யப்படும் எரிவாயு விலைக்கு நிகராக, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் எரிவாயு விலையை உயர்த்த ஒப்புதல் அளித்தது. இதன்படி, இப்போது 4.2 அமெரிக்கா டாலராக உள்ள 10 லட்சம் தெர்மல் யூனிட் எரிவாயு விலை, 8 டாலராக அதிகரிக்கும்.

பிரதமரின் பொருளாதார ஆலோசகர் சி.ரங்கராஜன் தலைமையிலான குழு அளித்த பரிந்துரையின்படி அறிவிக்கப்பட்டுள்ள இந்த விலை உயர்வு, 2014-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமலுக்கு வரும்.

இறக்குமதி செய்யப்படும் எரிவாயு விலை மற்றும் சர்வதேச சந்தையின் சராசரி விலை அடிப்படையில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை விலை மாற்றி அமைக்கப்படும். இந்த முறை 5 ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த எரிவாயு விலை உயர்வுக்கு மத்திய எரிசக்தி, உரத்துறை அமைச்சகங்களும், இடதுசாரிக் கட்சிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

எரிவாயு விலையை உயர்த்தினால் ஒரு யூனிட் மின்சாரத்துக்கான கட்டணம் ரூ.2.93லிருந்து ரூ.6.40 ஆக அதிகரிக்க வேண்டியிருக்கும் என மின்சார அமைச்சகம் கூறியுள்ளது.

இதுபோல, எரிவாயு விலை உயர்வால் உர உற்பத்திச் செலவு ஆண்டுக்கு ரூ.9,000 கோடி அதிகரித்து, உர விற்பனை விலையை அதிகரிக்க நேரிடும் என்று உரத் துறை அமைச்சகம் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஹெலிகாப்டர் சேவை தொடரும்: அரசுக்கு சொந்தமான பவன் ஹான்ஸ் ஹெலிகாப்டர் நிறுவனம் லட்சத் தீவுகளில் குறைவான கட்டணத்தில் வழங்கி வரும் போக்குவரத்து சேவையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இது கடந்த ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதி முதல் 2017 மார்ச் 31 வரை அமலில் இருக்கும். கடந்த 1987ஆம் ஆண்டு முதல் ஹெலிகாப்டர் சேவை வழங்கப்படுகிறது. இந்த சேவை 2012 மார்ச் 31ஆம்தேதியுடன் முடிந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.06.2013**

## இயற்கை உர பயன்பாடு சிறு விவசாயிகள் ஆர்வம்

கோத்தகிரி:நீலகிரி மாவட்ட தேயிலை மற்றும் காய்கறி விவசாயிகள் இயற்கை உரங்களை பயன்படுத்திவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிரதானமாக உள்ளது. விவசாயிகள் ரசாயன உரங்களை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். போதிய விழிப்புணர்வு இல்லாத நிலையில், இவ்வகை உரங்களால், மண்ணின் தன்மை பாதிக்கப்படுவதுடன், மகசூலும் குறைய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இதை தவிர்க்கும் பொருட்டு, அரசு இயற்கை உரங்களை பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. "தேயிலை, காபி, காய்கறி, தானிய வகைகள் மலர் சாகு படி' என, அனைத்து விவசாய பயிர்களுக்கும் இயற்கை உரத்தை பயன்படுத்தினால், மாவட்ட உணவு உற்பத்தியில் மறுமலர்ச்சியைக் கொண்டுவர முடியும் என நம்பப்படுகிறது. இயற்கை உரங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் அரசு சில தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தை பொறுத்தமட்டில், நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் (என்.சி.எம்.எஸ்.,) மூலமாக, இயற்கை உரங்களை விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிராமப்புற விவசாயிகள் மத்தியில், இயற்கை உரங்களின் மீதான ஆர்வம் அதிகரித்து வருவதால், இதுவரை, தனியார் நிறுவனங்கள் மூலம் சுமார் 500 டன் உரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## வாய்க்கால்கள் உடனடியாக தூர்வாரப்படும் விவசாயிகள் கூட்டத்தில் கலெக்டர் தகவல்

திருச்சி: ""குறுவை சாகுபடிக்காக கடைமடை பகுதிகளுக்கு காவிரி நீர் செல்லும் வகையில், வாய்க்கால்களை தூர் வாரும் பணி உடனடியாக துவங்கப்படும்,'' என திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீ கூறினார்.

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் நேற்று நடந்தது. கூட்டம் துவங்கியவுடன், விவசாய கடன் பெற்று திருப்பி செலுத்தாத, விவசாயிகளின் விபரங்களை, செய்திதாள்கள், ஃப்ளக்ஸ் பேனர்களில் விளம்பரம் செய்வது, சொத்து, டிராக்டர்களை பறிமுதல் செய்து வங்கி அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, விவசாயிகள் கலெக்டர் முன் கூடி முறையிட்டனர்.
குறைதீர் கூட்டத்தில் விவசாயிகளை சமரசம் செய்த கலெக்டர் ஜெயஸ்ரீ பேசியதாவது:
வறட்சி காரணமாக விவசாய கடனை திருப்பி செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டு, வசூல் செய்யும் பணி தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து வங்கி அதிகாரிகள் கூட்டங்களில் முடிவு செய்யப்பட்டுள்ளது.
அரசின் இந்த சலுகையை பெற, சம்மந்தப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் மனு அளிக்க வேண்டும். கடன் முழுவதும் தள்ளுபடி செய்யவில்லை என்பதை, விவசாயிகள் புரிந்துகொள்ள வேண்டும். அதனால் வங்கி அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பது தடுத்து நிறுத்தப்படும். எனினும் ஒரு முறை செட்டில்மென்டுக்கு வங்கிகள் தயாராக உள்ளது.
இவ்வாறு கலெக்டர் பேசினார்.
காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்க துணை செயலாளர் சுப்பிரமணியன் பேசுகையில்,""மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பதால், விரைவில் குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. கடை மடை பகுதிகளுக்கு காவிரி நீர் சென்றடையும் வகையில், வாய்க்கால்களை தூர் வார வேண்டும். பள்ளி நேரங்களில் கிராமங்களுக்கு கட் சர்வீஸ் பஸ் இயக்க வேண்டும்," என்றார்.
இதற்கு கலெக்டர் ஜெயஸ்ரீ பதிலளித்து பேசியதாவது:
காவிரி நீர் கடை மடை பகுதியை சென்றடையும், வகையில் வாய்க்கால்களை தூர் வாரும் பணி, பொதுப்பணித்துறையின் ஆற்று பாசன பிரிவு சார்பில் உடனடியாக மேற்கொள்ளப்படும்.
கிராமப் புறங்களில் பள்ளி நேரத்தில் கட் சர்வீஸ் பஸ் இயக்குவது குறித்து, மாவட்டம் முழுவதும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.
ஏரிகளில் வண்டல் மண் எடுப்பது தொடர்பாக, விவசாயிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு, விதிமுறைகள் வகுக்கப்படும். வர்த்தக பணிகளுக்காக வண்டல் மண்ணை அள்ளினால், நடவடிக்கைகள் கடுமையாக இருக்கும்.
புள்ளம்பாடி பகுதியில் மினரல் வாட்டர் நிறுவனம் அமைக்க யாரும் அனுமதி வழங்கவில்லை. அனுமதியின்றி அந்த நிறுவனம் செயல்பட்டால், சீல் வைக்கப்படும்.

சரக்கு வாகனங்களில் ஆட்களை ஏற்றுவது குறித்து போலீஸ் மற்றும் வட்டார போக்குவரத்து அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
காகித ஆலை அமைவதன் மூலம் மணப்பாறைக்கு, மாற்று முகம் அமையவுள்ளது. வேலைவாய்ப்பற்ற அந்த பகுதியில் காகித ஆலை அமைக்க நிலம் கொடுக்கும் அனைவருக்கும், வேலை உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள் இத்திட்டத்தை வரவேற்கும் வகையில் நிலைமை மாறியுள்ளது.இவ்வாறு கலெக்டர் பேசினார்.

**வேளாண் அலுவலருக்கு தொழில்நுட்ப பயிற்சி**

உடையார்பாளையம்: உடையார்பாளையம் அருகே உள்ள தா.பழூர் யூனியனில் உள்ள கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் வேளாண் அலுவலர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி நடந்தது.
திட்ட பணியாளர் விவேகானந்தன் வரவேற்றார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் குணசேகரன் தலைமை வகித்தார். மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் சுப்பையா (பொ) முன்னிலை வகித்தார்.
திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜகலா (பொ), மனையியல் தொழில்நுட்ப வல்லுனர் உமாசந்திரா ஆகியோர் செம்மை கரும்பு சாகுபடியிலுள்ள தொழில்நுட்பம் மற்றும் விவசாய குழு அமைக்கும் விதம் குறித்து பயிற்சியளித்தனர்.
மேலும், இந்த பயிற்சியில் செம்மை கரும்பு சாகுபடியில் விதை நேர்த்தி, நாற்றங்கால் தயாரிப்பு முறை மற்றும் வளர்ப்பு முறை பற்றி செயல்விளக்கம் அளித்தனர்.
பயிற்சியில் அரியலூர், செந்துறை, ஜெயங்கொண்டம், திருமானூர், ஆண்டிமடம், தா.பழூர் ஆகிய யூனியன்களிலிருந்து 25 வேளாண் உதவி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.
கிரீடு வேளாண் அறிவியல் மைய நிர்வாக மேற்பார்வையாளர் நீலகண்டன் நன்றி கூறினார்.

**உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்: தாசில்தார் பங்கேற்பு**

அரியலூர்: அரியலூர் மாவட்டம், திருமானூர் ஆர்.ஐ., அலுவலக வளாகத்தில் நேற்று நடந்த, உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாமுக்கு, சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் தண்டபாணி தலைமை வகித்தார். ஆர்.ஐ., கண்ணன் வரவேற்றார். திருமானூர் பிர்க்கா

அளவில் நடந்த இம்முகாமில், உழவர் பாதுகாப்பு திட்ட அட்டை வழங்க வேண்டும் என, பொதுமக்கள் தரப்பில், 105 மனுக்கள் வழங்கப்பட்டது.
நிகழ்ச்சியில் வி.ஏ.ஓ.,க்கள் ராஜேந்திரன், மனோகரன், வீரமணி, ராஜய்யா, மகேஸ்வரன், பழனிசாமி மற்றும் கிராம பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.
* கீழப்பழுவூரில் நேற்று முன்தினம் நடந்த, உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாமுக்கு, சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் தண்டபாணி தலைமை வகித்தார். கீழப்பழுவூர் ஆர்.ஐ., சண்முகசுந்தரி வரவேற்றார். உழவர் பாதுகாப்பு திட்ட அட்டை வழங்க வேண்டும் என, கீழப்பழுவூர் பிர்க்காவுக்குட்பட்ட மல்லூர், வாரணவாசி, பார்ப்பனச்சேரி, கீழப்பழுவூர், சன்னாவூர், பூண்டி, சாத்தமங்கலம், வெற்றியூர், கரைவெட்டி, பளிங்காநத்தம் உள்ளிட்ட வருவாய் கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் சார்பில், 568 மனுக்கள் கொடுக்கப்பட்டது. மனுக்களை பரிசீலித்த தாசில்தார் தண்டபாணி, அவற்றுக்கான உழவர் பாதுகாப்பு அட்டை விரைவில் வழங்கப்படும் என கூறினார்.
முகாமில் வி.ஏ.ஓ.,க்கள் ராஜ்குமார், கலைக்கோட்டுதயம், பழனிசாமி, சிவநேசன், மேகலா, ஆரோக்கியசாமி, உமாசங்கர், கார்த்திகேயன், ராஜராஜன் மற்றும் கிராம பொதுமக்கள் பலரும் பங்கேற்றனர்.

**அழிந்து வரும் வெற்றிலை சாகுபடி: தோட்டக்கலை துறை அதிகாரிகள் மீது புகார்**

மதுராந்தகம்:மதுராந்தகம் மற்றும் சுற்றுப் பகுதி கிராமங்களில், நீண்ட காலமாக, வெற்றிலை சாகுபடி செய்து வந்த விவசாயிகளுக்கு, தோட்டக்கலைத் துறை அதிகாரிகள், சரிவர ஆலோசனை மற்றும் சலுகைகளை வழங்காததால், வெற்றிலை சாகுபடி முற்றிலும் முடங்கி உள்ளது.குறைவுதோட்டக்கலை பயிர்களில், பணப்பயிராக கருதப்படுவது வெற்றிலை. தமிழகத்தில், வெற்றிலை சாகுபடி, கும்பகோணம், நாமக்கல் போன்ற மாவட்டங்களில், அதிகப்படியாக நடைபெறுகிற போதிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில், மதுராந்தகம் அடுத்த கருங்குழி, கத்திரிச்சேரி மற்றும் விழுதமங்களம் போன்ற பகுதிகளில், முன்பு, பல ஏக்கர் பரப்பளவில், வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.குறிப்பாக, வெள்ளை ரக வெற்றிலையை, அதிகளவு சாகுபடி செய்துள்ளனர். அறுவடை செய்யப்படும் வெற்றிலையை, பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி விற்பனை செய்துள்ளனர். ஆனால், தோட்டக்கலை துறை சார்பில், இவர்களுக்கு, தகுந்த ஆலோசனைகளோ, சலுகைகளோ முறைப்படி வழங்காததால், காலப்போக்கில், வெற்றிலை சாகுபடி வெகுவாக குறைந்து, ஆங்காங்கே ஒருசிலர் மட்டும், குறைந்த

அளவில் இச்சாகுபடியை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிப்புஇதுகுறித்து, கருங்குழி, மலைப்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி நாராயணசாமி கூறியதாவது:மதுராந்தகம் வட்டத்திற்கு உட்பட்ட பல கிராமங்களில், முன்பு, 120 ஏக்கர் பரப்பளவு வரை, இங்குள்ள விவசாயிகள், வெற்றிலை சாகுபடி செய்தனர். இதற்காக, ஆந்திரா, கடப்பா, மாதேஸ்வர் போன்ற பகுதியில் இருந்து, வெற்றிலை செடிகளை கொண்டு வந்து, பயிர் செய்து, பல்வேறு பகுதிகளில் விற்பனை செய்தோம்.முன்பு, அரசு சார்பில் வெற்றிலை சாகுபடிக்கு, ஆலோசனைகள், மானிய விலையில் பூச்சி கொல்லி மருந்துகள் போன்றவைகளை அளித்தனர். இந்நிலையில், கடந்த 30 ஆண்டுகளுக்கு முன், இப்பகுதியில், மாத்திரை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று உருவானது. அதிலிருந்து, வெளியேற்றப்படும் ரசாயன கழிவுகள், ஏரி நீரில் கலந்ததால், வெற்றிலை சாகுபடி பாதித்தது.இதனை, தடுக்கக் கோரி, மாவட்ட நிர்வாகத்திடம் பல முறை மனு அளித்தும், எவ்வித நடவடிக்கையும் இல்லை. மேலும், தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், எங்களுக்கு தகுந்த ஆலோசனைகளோ, சலுகைகளோ வழங்கவில்லை. இதனால், சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது, ஒரு சிலர் மட்டும், குறைந்த அளவில் வெற்றிலை சாகுபடி செய்து வருகின்றனர். எனவே, அதிக வருவாய் தரும் இச்சாகுபடியை மேற்கொள்ள அரசு உதவ வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.

**நவீன உற்பத்தி யுக்திகள் மற்றும் வடிவமைப்புக்குதமிழக அரசு சார்பில் ரூ.50 லட்சம் வரை மானியம்**

விழுப்புரம்:நவீன உற்பத்தி யுக்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு செய்யும் ஒவ்வொரு தொழில் மையத் திற்கும் 50 லட்சம் ரூபாய் வரை மாநில அரசு சார்பில் மானியம் அளிக்கப்படுகிறது என அமைச்சர் மோகன் பேசினார்.தமிழ்நாடு சிறு மற்றும் குறு தொழில்கள் சங்கம், மாவட்ட சிறு மற்றும் குறு தொழில்கள் சங்கம் சார்பில் விழுப்புரத்தில் கருத்தரங்கம் நடந்தது. கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார்.அமைச்சர் மோகன் பங்கேற்று, புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் படி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு முதலீட்டு மானியமாக 15 பேருக்கு 59.21 லட்சம் ரூபாய் வழங்கி பேசியதாவது: தமிழகத்தில் 48 ஆயிரத்து 189 கோடி ரூபாய்க்கு மேலான முதலீட்டுடன், 58 லட்சத்து 83 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க, 8.44 லட்சம் பதிந்த நிறுவனங்கள்

செயல்படுகின்றன.சிறு, குறு தொழில் மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக 10 முக்கியமான சலுகைகளை தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். ஏற்கனவே அளித்த முதலீட்டு மானியத்தொகை 15 விழுக்காட்டிலிருந்து 25 சதவீதமாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார்.நவீன உற்பத்தி யுக்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு செய்யும் ஒவ்வொரு மையத்திற்கும் 50 லட்சம் ரூபாய் வரை மானிய உதவி அளிக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்கள் வெற்றிபெற இத்தகைய சலுகைகளுடன், தொழில்நுட்ப யுக்திகளும் அவசியமானது.அதற்கு தேவையான நிதியை எதிர்நோக்கும் குறு மற்றும் சிறு தொழில்களுக்கு முதலீடு செய்வதில் நிதி நிறுவனங்கள் தயக்கம் காட்டுகின்றன. அவற்றை சரி செய்வதில் நிதி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயல்படுவது அவசியம்.இவ்வாறு அமைச்சர் மோகன் பேசினார். சிறு மற்றும் குறு தொழில்துறை கூடுதல் ஆணையர் ஜோசப்ரவி, தொழில்துறை கூடுதல் ஆணையர் பரமேஸ்வரன், மாவட்ட குறு மற்றும் சிறு தொழில் சங்க தலைவர் கருணாநிதி, டான்ஸ்டியா பொதுச் செயலாளர் மோகன், துணைத் தலைவர் பாபு, குறு மற்றும் நடுத்தர தொழிலதிபர்கள் சங்க தலைவர் ஜெயக் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சின்னசேலத்தில் மழை: விவசாயிகள் எதிர்பார்ப்பு**

சின்னசேலம்:சின்னசேலம் பகுதியில் மேகமூட்டம் கருமையாக இருந்ததால் கன மழை பெய்யுமா என விவசாயிகள் மிகவும் எதிர்பார்த்தனர்.சின்னசேலம் தாலுகாவில் தொட்டியம், எலவடி, பூண்டி, கருந்தலாக்குறிச்சி உள்ளிட்ட 85 கிராமங்கள் உள்ளன. இங்குள்ள விவசாயிகள் மரவள்ளி, மணிலா, மக்காசோளம் பயிர் செய்கின் றனர். இந்த ஆண்டு பருவ மழை இல்லாமல் 2500 எக்டர் பரப்பிற்கு பதிலாக 40 எக்டர் மட்டுமே நெல் பயிர் செய்தனர். மரவள்ளி, மஞ்சளும் குறைந்த பரப்பில் பயிர் செய்துள்ளனர்.எதிர்பார்ப்புநேற்று மாலை மேகமூட்டம் அதிகமாக இருந்ததால் மழை பெய்யுமா என்று விவசாயிகள் எதிர்ப்பார்த்தனர். கடந்த 15 நாட்களுக்கு முன் பெய்த மழையை பயன்படுத்தி நெல் பயிரிட நாற்று விட்டனர். மழை இல்லாததால் வயல் ஓட்ட முடியவில்லை. பல கிராமங்களில் குடிதண்ணீர் பிரச்னை தீரவில்லை. கன மழை பெய்யுமா என்று எதிர்பார்த்துள்ளனர்.விவசாயிகள் மானவாரியாக பயிரிடும் மணிலா, சோளம், துவரை உள்ளிட்ட பயிர்களுக்கு நிலத்தை தயார் படுத்தும் பணியை துவக்கியுள்ளனர்.

**மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கணும்**

பள்ளிபாளையம்: ""மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும். இது தொடர்பாக, நகராட்சி முழுவதும் ஆய்வு செய்யப்படும்,'' என, கவுன்சில் கூட்டத்தில், சேர்மன் வெள்ளியங்கிரி கூறினார்.

பள்ளிபாளையம் நகராட்சி கவுன்சில் கூட்டம், அதன் அலுவலக கூட்ட அரங்கில், நேற்று நடந்தது. சேர்மன் வெள்ளியங்கிரி தலைமை வகித்தார். துணைத் தலைவர் சுப்ரமணி, கமிஷனர் முத்து வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம் பின்வருமாறு:

அமிர்தலிங்கம் (சுயே.,): குடிநீர் பைப் லைன் அடிக்கடி பழுதடைந்து விடுகிறது. அவற்றை சரி செய்வதற்கு காலதாமதமாவதால், மக்கள் தண்ணீர் பெறுவதில் சிரமப்படுகின்றனர்.

வெள்ளியங்கிரி (சேர்மன்): ஆட்கள் குறைவு காரணமாகவே காலதாமதமாகிறது. குடிநீர் பைப் லைன் பணிக்கு கூடுதல் ஆட்களை நியமிக்க, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மகாலட்சுமி (தே.மு.தி.க.,): எனது வார்டில், செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்து, நான்கு முறை கடிதம் கொடுத்துள்ளேன். ஆனால், இதுவரை, எந்தப்பணியும் செய்யவில்லை.சேர்மன்: உங்கள் வார்டில், ஆழ்துளை குழாய் கிணறு, குடிநீர் பைப் லைன், சாக்கடை வசதி போன்ற பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், பல பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.சுப்ரமணி (துணைத் தலைவர்): நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளுக்கும், வேலைகள் பகிர்ந்து செய்யப்படுகிறது. ஒரே வார்டுகளில், அனைத்து பணிகளும் செய்ய முடியாது.கண்ணையன் (அ.தி.மு.க.,): பள்ளிபாளையம் பகுதிக்கு, அவசர காலத்தில் உதவ, 108 ஆம்புலன்ஸ் சேவை திட்டம் தேவை.

துணைத் தலைவர்: பள்ளிபாளையம் அரசு மருத்துவமனைக்கு, 108 ஆம்புலன்ஸ் சேவை மற்றும் கூடுதல் மருத்துவர்கள் தேவை என அரசுக்கு ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் உத்தரவு வரும் என எதிர்பார்க்கிறோம்.

சேர்மன்: மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும். இது தொடர்பாக நகராட்சி முழுவதும் ஆய்வு செய்யப்படும். அனைத்து கவுன்சிலர்களும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

அமிர்தலிங்கம் (சுயே.,): பள்ளிபாளையம் பகுதியில், டீக்கடை, ஹோட்டல், மளிகை கடை உள்ளிட்ட வர்த்தக நிறுவனங்களில், பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். மக்களுக்கு தெரியும் வகையில், விலை பட்டியல் வைக்க நடவடிக்கை

எடுக்க வேண்டும்.சேர்மன்: நுகர்வோர் கமிட்டிக்கு, நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படும்.இவ்வாறு விவாதம் நடந்தது.

**விதை சோளம் வழங்காததால் விவசாயிகள் ஏமாற்றம் : அரசு திட்டம் செயல்படுத்துவதில் மெத்தனம்**

நாமக்கல்: அரசு அறிவித்தபடி, 6,500 ரூபாய் மானியம், இலவச விதைச் சோளம் மற்றும் ஒவ்வொரு விவசாயிக்கும், தலா மூன்று கிலோ வைக்கோல் வழங்கும் திட்டம் எதுவும், நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தபடவில்லை. இது, மாவட்ட விவசாயிகள் மத்தியில், பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.
பருவ மழை பொய்த்ததால், தமிழகம் முழுவதும், கடும் வறட்சி நிலவி வருகிறது. பாசன வசதி அளித்த ஆறு, ஏரி, குளம் மட்டுமின்றி, குட்டை, கிணறு போன்ற நீர் நிலைகளும் வறண்டு காணப்படுகிறது. அதனால், விவசாயத்திற்கு மட்டுமின்றி, பரவலாக குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.
விவசாயம் மடிந்ததால், காய்கறிகளின் விலை, உச்சத்தை தொட்டிருப்பது, ஒரு புறம் இருந்தாலும், கால்நடைகளுக்கு தேவையான சோளத்தட்டு, வைக்கோல் போன்றவற்றுக்கும், தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நிலைமையை சமாளிக்க முடியாத பல விவசாயிகள், தங்களது ஆடு, மாடு போன்ற, கால்நடைகளை விற்பனை செய்யத் துவங்கினர்.
அதில், கறவை மாடுகள், அதிகளவு விற்பனை செய்யப்பட்டதால், தமிழகம் முழுவதும், பரவலாக பால் உற்பத்தி வெகுவாக குறைந்தது. நிலைமையை சமாளிக்க, விவசாயிகளுக்கு, இலவச விதைச் சோளம் வழங்க, அரசு முடிவு செய்தது. அவ்வாறு வழங்கப்படும் விதை சோளத்தை, விவசாயிகள் நடவு செய்து, பயிர் உற்பத்தி செய்தால், அதை ஆவின் நிறுவனம் விலை கொடுத்து வாங்கிக் கொள்ளும் எனவும், அரசு தெரிவித்தது.
தவிர, வறட்சி காலம் முடிவுக்கு வரும் வரை, அந்த மாவட்டத்தில் குறிப்பிட்ட மையம் ஏற்படுத்தி, அங்கு கால்நடைகளுக்கு தேவையான வைக்கோல் போர் வழங்குவதாகவும், அரசு தெரிவித்தது. எனினும், விதை சோளம் மற்றும் வைக்கோல் எதுவும் இதுவரை வழங்கப்படாமல் உள்ளது. இது, நாமக்கல் மாவட்ட விவசாயிகள் மத்தியில், கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.
கல்குறிச்சி உழவர் முன்னேற்ற சங்க விவசாயி முருகேசன் கூறியதாவது:

வறட்சியால், விவசாயம் மட்டுமின்றி, கால்நடை வளர்ப்போரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வெறும் கால்நடையை மட்டும் நம்பியுள்ள பலர், தங்கள் கால்நடை பலவற்றை இறைச்சிக்கு விற்பனை செய்துவிட்டனர். வறட்சியால், தீவனப் பொருட்கள் கடும் விலையேற்றம் கண்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பலர், அரசு மானிய விலையில் தீவனப் பொருள் வழங்க வேண்டும் என, தொடர் கோரிக்கை விடுத்து வந்தனர். அதையடுத்து, விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில், ஒவ்வொரு விவசாயிக்கும், தலா, 6,500 ரூபாய் மானியம் மற்றும் அவர்களது விளை நிலத்திற்கு ஏற்ற வகையில், விதைச் சோளம் வழங்கப்படும் என, அரசு அறிவித்தது.

மேலும், அந்த விதைச்சோளம் மூலம் விளைவிக்கப்படும் சோளத்தட்டு பச்சை கிலோ இரண்டு ரூபாய்க்கும், காய்ந்தது கிலோ, 12 ரூபாய்க்கும் ஆவின் வாங்கிக் கொள்ளும். இது, ஆவினுக்கு பால் ஊற்றும் விசாயிகள் மட்டுமின்றி, அனைத்து தரப்பு விவசாயிகளுக்கும், இத்திட்டம் செயல்படுத்தப்படும் எனவும், அரசு தெரிவித்தது. அதுபோல், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட மையத்தில் விவசாயிகளுக்கு தலா மூன்று கிலோ வைக்கோல் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. நாமக்கல் மாவட்டத்தில், ஜூன், 20ம் தேதி, 20 மையங்கள் ஏற்படுத்தி, அரசு அறிவித்தபடி, வைக்கால் போர் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை, எதுவும் வழங்கவில்லை.

அதற்கான முயற்சியும், மாவட்ட நிர்வாகம் எடுக்கவில்லை. இது, விவசாயிகளை ஏமாற்றமடையச் செய்யும் வகையில் அமைந்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**பாம்ரோஸ் சாகுபடி: விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: பாம் ரோஸ் புல் சாகுபடி மூலம் போதிய வருமானம் கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம், விவசாய தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம். தர்மபுரி, நல்லம்பள்ளி, ஏமாகுட்டியூர் உள்ளிட்ட மாவட்டம் முழுவதும், குளியல் சோப் மற்றும் வாசனை திரவியங்களுக்கு பயன்படுத்தப்படும், பாம் ரோஸ், 1,200 ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த மே மாத இறுதியிலும், ஜூன் முதல் வாரத்திலும் பெய்த மழையின் காரணமாக, மாவட்டம் முழுவதும் சாகுபடி செய்யப்பட்டுள்ள, பாம் ரோஸ் செடிகள் தற்போது நன்கு

வளர்ந்து பசுமையாக காணப்படுகிறது. மேலும் பல பகுதிகளில், பாம் ரோஸ் அறுவடையும் துவங்கியுள்ளது.

நல்லம்பள்ளியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியது:

போதிய தண்ணீர் வசதியில்லாததால், மானாவரியாக கடந்த, நான்கு ஆண்டுகளாக, பாம் ரோஸ் சாகுபடி செய்து வருகிறேன். கடந்தாண்டு பருவமழை போதிய அளவு பெய்யாததால், பாம் ரோஸில் இருந்து கிடைக்கும் எண்ணெய் அளவும் கணிசமாக குறைந்தது.

கடந்த மாதம் இறுதியிலும் அதனை தொடர்ந்து இம்மாதமும் பெய்த ஓரளவு மழையால், பாம் ரோஸ், நன்கு வளர்ந்து வருகிறது. கோடை மழையை அடுத்து எங்கள் பகுதியில் மேலும் பல ஏக்கரில் பாம் ரோஸ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கோடை மழையை தொடர்ந்து, தற்போது அறுவடை செய்யப்படும் பாம் ரோஸில் இருந்து, ஒரு ஏக்கருக்கு, எட்டு லிட்டர் வரை பாம் ரோஸ் எண்ணெய் கிடைக்கிறது. பாம் ரோஸ் சந்தையில் தற்போது உள்ள வரவேற்பு காரணமாக, போதிய விலை கிடைப்பதால், விவசாயிகளுக்கு கணிசமான லாபம் கிடைக்கிறது.இவ்வாறு கூறினார்.

**பசுந்தேயிலை மகசூல் அதிகரிப்பு தேயிலை உற்பத்தியில் "விறுவிறு'**

மஞ்சூர்:பசுந்தேயிலை மகசூல் அதிகரிப்பால், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை தூள் உற்பத்தி "விறுவிறுப்பாக' நடந்து வருகிறது.மஞ்சூர் பகுதிகளில் 8 கூட்டுறவு மற்றும் தனியார் தேயிலை தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு மாதங்களாக, இப்பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. விவசாயிகளும் உரம் இட்டு தேயிலை தோட்டங்களை பராமரித்தனர். தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து அதிகரிக்க துவங்கியது. இதனால், தற்போது கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நாளொன்றுக்கு 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் கிலோ வரை பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு, தேயிலை தூள் உற்பத்தி விறுவிறுப்பாக நடக்கிறது. தொழிற்சாலைகளுக்கு அதிகப்படியான பசுந்தேயிலை வர துவங்கியதால், கொள்முதல் அளவை குறைக்கும் வகையில், சில கூட்டுறவு தொழிற்சாலைகளில் "கோட்டா' முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## வண்டல் மண் இருப்பு வைக்கும் விவசாயிகள் பிளாஸ்டிக் நீங்கலான குப்பைகள் எதிர்பார்ப்பு

பவானி: பவானி பகுதியில் உள்ள விவசாயிகள், தற்போது அதிக அளவில் இயற்கை உரத்துக்கு முக்கியதுவம் கொடுத்து வரும் நிலையில், பல இடங்களில் உள்ள குப்பை, வண்டல் மண் ஆகியவற்றை விலைக்கு வாங்கி, பாதுகாத்து வருகின்றனர். பவானி தாலுகா முழுவதும் விவசாய விளைபொருட்கள் உற்பத்தி செய்யும் பல கிராமங்களை கொண்ட பகுதியாகும். காவிரி, பவானி போன்ற இரண்டு ஆறுகள் மூலம் கிடைக்கும் நீர் பாசனம், கிணற்று நீர் பாசனம், ஏரி நீர் பாசனம் போன்றவற்றால், நெல், கரும்பு, வாழை, எள், பருத்தி, சோளம் மற்றும் பல வகையான தானியங்கள் உற்பத்தி செய்கின்றனர்.

தற்போது பவானி, ஜம்பை, தளவாய்பேட்டை, ஆப்பகூடல் உட்பட பல கிராமங்களை சேர்ந்த விவசாயிகள், இயற்கை உரமான காய், கனி கழிவு பொருட்கள், குப்பைகள், ஏரியின் வண்டல் மண் ஆகியவற்றை விலைக்கு வாங்கி, தங்கள் தோட்டத்தின் அருகில் கொட்டி, அதை முறையாக பயன்படுத்தி வருகின்றனர். விவசாயிகள் கூறியதாவது:

ரசாயன உரங்களை விட, இயற்கை உரம் விவசாயிகளின் தோழன் என்பவர். அதன்படி, ரசாயன உரங்களின் விலை ஒரு மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளதால், இயற்கை உரங்களான குப்பை, பிளாஸ்டிக் இல்லாத கழிவுகள், வண்டல் மண்ணை எடுத்து பயன்படுத்துகிறோம். இதன் மூலம் நிலத்துக்கு பாதிப்பில்லை. குறைந்த செலவில் மண் கிடைக்கிறது.

காய், கனி குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் பிரித்து, நகராட்சி நிர்வாகம் எங்களுக்கு வழங்கினால் விவசாயிகளுக்கு நல்ல பலன் அளிக்கும். வண்டல் மண், குப்பை போன்றவைகளை ஒரு லோடு எடுத்து வர, 1,500 முதல், 2,000 ரூபாய் செல்வாகிறது. இருந்தும், மகசூல் அதிகமாக கிடைக்கும் என்பதால், மழைக்கு முன்பாக எடுத்து வந்து, இருப்பு வைத்துள்ளோம், என்றனர்.

## கொடுமுடியாறு அணையை திறக்க கோரி விவசாயிகள் முற்றுகை போராட்டம்

வள்ளியூர் : வள்ளியூரில் கொடுமுடியாறு அணையை திறக்க கோரி விவசாயிகள் பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

திருக்குறுங்குடி மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கொடுமுடியாறு அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையிலிருந்து வள்ளியூரான் கால்வாய், வடமலையான் கால்வாய், படலையார்குளம் கால்வாய் ஆகியவை மூலம் தண்ணீர் சென்று சுமார் 10ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாசன பரப்பில் விவசாய நிலங்கள் பயனடைந்து வருகிறது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் இப்பகுதியில் கடும் வறட்சி நிலவி வருகிறது.

இந்நிலையில் கடந்த சில வாரங்களாக பெய்த தென்மேற்கு பருவ மழையால் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. அணையில் சுமார் 36அடி தண்ணீர் இருக்கும் நிலையில் பாசன பகுதிகளுக்கு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும். மேலும் குடிநீர் ஆதாரத்தை பெருக்கும் விதமாகவும் தண்ணீர் திறக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். ஆனால் கொடுமுடியாறு அணையிலிருந்து இதுவரை தண்ணீர் திறக்கப்படவில்லை.
இதனால் அதிருப்தி அடைந்த வள்ளியூர், தெற்குவள்ளியூர், கீழ்குளம், அழகப்பபுரம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் 100க்கும் மேற்பட்டோர் கொடுமுடியாறு பாசன சங்க தலைவர் சுப்பிரமணியன் தலைமையில் வள்ளியூரில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அப்போது முற்றுகையிட்ட விவசாயிகளிடம் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தனர். அதன்பேரில் முற்றுகையிட்ட விவசாயிகள் கலைந்து சென்றனர்.

**நாற்றங்கால் அமைக்கும் பணி பெரியாறு அணையில் நீர் திறப்பு**

கூடலூர்:பெரியாறு அணையில் இருந்து, முதல் போக நெல் சாகுபடிக்காக, நேற்று தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில், நாற்றங்கால் அமைத்து நாற்றுகள் வளர்க்கும் பணியில், விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.

பெரியாறு அணை நீரை நம்பி, தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் 14 ஆயிரத்து 707 ஏக்கரில், இரு போக நெல் சாகுபடி நிலங்கள் உள்ளன. முதல் போக நெல் சாகுபடிக்காக, அணையில் இருந்து வழக்கமாக ஜூன் முதல் தேதி தண்ணீர் திறக்கப்படும். இதனைத் தொடர்ந்து, இரண்டாம் போக சாகுபடியும் நடக்கும்.

தென்மேற்கு பருவ மழை, கேரளாவில் கடந்த சில தினங்களாக வலுவடைந்துள்ளது.

எல்லையோரமான கம்பம் பள்ளத்தாக்கிலும் மழை பெய்து வருகிறது. பெரியாறு அணை நீர்பிடிப்பில் பெய்யும் கன மழையால்,நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 124.7 அடியாக உயர்ந்துள்ளது. இந்நிலையில், நேற்று (ஜூன் 28) காலை 9.30 மணிக்கு பெரியாறு அணையில் இருந்து, கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக நெல் சாகுபடிக்காக, தண்ணீர் திறக்கப்பட்டது.

ஏற்கனவே தொடர் மழையால், அணை நீர்மட்டம் உயர்ந்து வந்ததாலும் கூடலூர், கம்பம், கே.கே.பட்டி, உத்தமபாளையம் பகுதிகளில், நாற்றங்கால் அமைத்து நாற்றுகளை வளர்க்கும் பணியில், விவசாயிகள் மும்முரமாகியுள்ளனர்.

நேற்று அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வி.காந்தல்ராஜ், கூடலூர் நன்செய் விவசாயிகள் சங்கம்:

கடந்த ஆண்டில், ஏராளமான விவசாயிகள் இரு போக நெல் சாகுபடி செய்ய முடியவில்லை. முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை என தெரியவந்துள்ள நிலையில், தற்போது பெய்து வரும் மழையால், அனைத்து விவசாயிகளும் நாற்றங்கால் அமைக்கும் பணியை ஏற்கனவே துவக்கி விட்டோம்.

ஜூன் முதல் தேதியே நாற்றாங்கால் அமைத்திருந்தால், தற்போது நடவு பணிகளில் பிஷியாகி இருப்போம்.' என்றார்.

அசோகன், விவசாய உதவி இயக்குனர்: அணையின் நீர்மட்டம் 124 அடியைக் கடந்துள்ளதால், கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது. தொடர்ந்து, நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால், நீர்மட்டம் மேலும் உயரும் நிலை உள்ளது.

இதனால் இந்த ஆண்டு இரண்டு போக நெல் விவசாயத்தையும் தண்ணீர் பற்றாக்குறையின்றி செய்ய வாய்ப்புள்ளது, என் றார்.

**ஊராட்சியால் முடிந்தது; மாநகராட்சியால் முடியாதா?: மழைநீர் சேமிப்பை செயலில் காட்டுங்க...**

கோவை:கோவை மாவட்டத்திலுள்ள ஊராட்சி, பேரூராட்சிகளில் மழைநீர் சேமிப்பு திட்டத்தை செயல்படுத்தாவிட்டால், குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும் என அறிவித்து, மழை நீரை சேமிக்க அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். ஆனால், மாநகராட்சி நிர்வாகத்தில் மழை நீர் சேமிப்பு திட்டத்திற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது வேதனையான உண்மை.தமிழகத்தில் கடந்த முறை அ.தி.மு.க., ஆட்சியின் போது, மழை நீர் சேமிப்பு திட்டத்திற்கான வரைபடத்தை, கட்டட வரைபடத்தில் குறிப்பிட்டு காண்பித்தால் மட்டுமே, கட்டட அனுமதி வழங்கப்பட்டது. ஊராட்சி முதல் மாநகராட்சி வரையிலும், மழை நீர் சேமிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.அதேபோன்று, அனைத்து அரசு துறை அலுவலகத்திலும் மழை நீர் சேமிப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மக்கள் அதிகளவில் திரளும் அரசு அலுவலகத்தில், மழை நீர் சேமிப்பு திட்டத்திற்கான மாதிரி அமைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.ஆட்சி மாறியதும், காட்சிகள் மாறுவது போன்று, மழை நீர் சேமிப்பு திட்டம் கைவிடப்பட்டது. கட்டட அனுமதிக்கான வரைபடங்களில் மழை நீர் சேமிப்பு திட்டம் கட்டாயம் இடம்பெற்றாலும், குடியிருப்புகளில் திட்டம் செயல்படுத்தப்பட்டதா என்ற ஆய்வு மேற்கொள்ளவது கைவிடப்பட்டது. இதனால், வரைபடத்தில் காண்பித்த திட்டத்தை, நடைமுறைப்படுத்துவது மெல்ல மறைந்தது.

அரசு அலுவலகங்களில் ஏற்படுத்தியிருந்த மழை நீர் சேமிப்பு திட்டத்தின் குழாய்கள் உடைந்து, அதற்காக அமைக்கப்பட்ட "சோக் பிட்' குப்பை சேமிப்பு குழியாக மாறியது. அரசு அலுவலகங்களின் முகப்பில் அமைக்கப்பட்ட, மழை நீர் சேமிப்பு மாதிரிகள் போன இடம் தெரியவில்லை.மழை நீரை சேமிக்கும் திட்டத்தை கைவிட்டது மட்டுமின்றி, மழை தருவிக்கும் மரங்களுக்கும், வனத்துக்கும் துரோகம் செய்ததால், பருவ மழையும் தவறிப்போனது. இதன்விளைவு, 100 அடிக்குள் இருந்த நிலத்தடி நீர்மட்டம் பல நூறு அடிக்கு கீழே சென்றது. குடியிருப்பு பகுதியிலுள்ள போர்வெல், விவசாய நிலத்திலிள்ள நீர் ஆதாரங்கள் பாதித்தது.கண் கெட்ட பிறகு, சூரிய நமஸ்காரம் செய்வது போன்று, காலம் கடந்து மரம் வளர்க்கவும், மழை நீரை சேமிக்கவும் அரசு வலியுறுத்தியுள்ளது. இதன் நோக்கத்தை உணர்ந்த உள்ளாட்சி அமைப்புகள், மழை நீர் சேமிப்பு கட்டமைப்பை கட்டாயமாக்கியுள்ளது. கோவை மாவட்டத்தில் அன்னூர் பேரூராட்சியிலும், சில ஊராட்சிகளிலும், மழை நீர் சேமிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது."மழைநீர்

சேமிப்பு கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். உரிய காலத்தில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்காவிட்டால், குடிநீர் இணைப்பு துண்டிப்பு உள்ளிட்ட மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என, ஊராட்சி, பேரூராட்சி அமைப்புகள் அறிவித்துள்ளது.மாநகராட்சி நிர்வாகம் தரப்பில், மழை நீர் சேமிப்பு திட்டத்திற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. மழை நீர் சேமிப்பு திட்டத்தை மாநகரத்தில் கட்டாயமாக்கினால், நிலத்தடி நீர்மட்டம் உயரும், ரோட்டில் மழை நீர் தேங்குவது தவிர்க்கப்படும்.கண் கெட்ட பிறகு, சூரிய நமஸ்காரம் செய்வது போன்று, காலம் கடந்து மரம் வளர்க்கவும், மழை நீரை சேமிக்கவும் அரசு வலியுறுத்தியுள்ளது.

இதன் நோக்கத்தை உணர்ந்த உள்ளாட்சி அமைப்புகள், மழை நீர் சேமிப்பு கட்டமைப்பை கட்டாயமாக்கியுள்ளது. கோவை மாவட்டத்தில் அன்னூர் பேரூராட்சியிலும், சில ஊராட்சிகளிலும், மழை நீர் சேமிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

## இந்திய உணவு கழகத்திற்கு கோதுமை ஏற்றுமதியில் லாபம்

இந்திய உணவுக் கழகம், 45 லட்சம் டன் கோதுமையை, மத்திய அரசு நிர்ணயித்ததை விட, கூடுதல் விலைக்கு ஏற்றுமதி செய்து, சிறப்பான லாபத்தை கண்டுள்ளது. **கையிருப்பு:**கடந்த சில ஆண்டுகளாக, நாட்டின் கோதுமை உற்பத்தி, உபரியாக உள்ளது. இதனால், இந்திய உணவுக் கழகத்தின் கையிருப்பில் இருந்து, 45 லட்சம் டன் கோதுமையை, இரு தவணைகளில் ஏற்றுமதி செய்ய, மத்திய அரசு அனுமதி வழங்கியது.இதையடுத்து, ஒரு டன் கோதுமை, சராசரியாக, 312 டாலர் என்ற விலையில், இந்திய உணவுக் கழகம் ஏற்றுமதி செய்துள்ளது. இது, அரசின், குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை (ஒரு டன்னுக்கு 228 டாலர் வீதம், 20 லட்சம் டன்; 300 டாலர் வீதம், 25 லட்சம் டன்) விட, அதிகமாகும். இதுகுறித்து, இந்திய உணவுக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை:கடந்த 2002-03ம் நிதியாண்டிற்கு பிறகு, சென்ற 2012ம் ஆண்டில் தான், மத்திய அரசு, முதன் முறையாக அதன் முகமை அமைப்புகள் மூலம் கோதுமை விற்பனைக்கு அனுமதி அளித்தது. தொடர்ந்து கோதுமை உற்பத்தியும், கொள்முதலும் அதிகரித்து வருவதால், இந்த முடிவு எடுக்கப்பட்டது. **சர்வதேச சந்தை** முதல் இரண்டு தவணைகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட கோதுமைக்கு, சர்வதேச சந்தையில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இதுவரை 40.30 லட்சம் டன் கோதுமை, இரு கட்டங்களாக, தென்கொரியா,எத்தியோப்பியா, வங்கதேசம், தாய்லாந்து மற்றும் ஏமன் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.இதைத் தொடர்ந்து மேலும், 20 லட்சம் டன் கோதுமை

ஏற்றுமதிக்கு அனுமதி வழங்குவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. நடப்பு ஜூன் 1ம் தேதி நிலவரப்படி, அரசு முகமை அமைப்புகளின் கிடங்குகளில், 7.77 கோடி டன் கோதுமை கையிருப் பில் உள்ளது. இது, தேவைப்படும், 2.01 கோடி டன்னை விட அதிகமாகும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்திய கோதுமையின் தரம், உலகின் மிகச் சிறந்த, ஆஸ்திரேலிய கோதுமைக்கு நிகராக உள்ளதால், அதன் ஏற்றுமதி அதிகரித்து உள்ளது. இதற்கு, அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளும் காரணம் எனலாம். இந்திய கோதுமையில், ரசாயன அளவு குறித்த ஆய்வை அரியானாவில் உள்ள கர்னால் கோதுமை ஆய்வு இயக்குனரகம் மேற்கொண்டது. இத்துடன், வெளிநாட்டு பிரதிநிதிகள், இந்தியாவிற்கு வந்து, கோதுமையின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டு திருப்தி தெரிவித்தனர். **இயந்திரமயம்:**இதையடுத்தே, கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டது. குஜராத்தின் முந்த்ரா மற்றும் கன்ட்லா துறைமுகங்கள் வழியாக, பெரும்பான்மை கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டது.ஏற்றுமதிக்கான கோதுமையை கையாள்வதில், முற்றிலும் இயந்திரமயத்தை புகுத்தினால், சர்வதேச போட்டியை சமாளித்து, மேலும் அதிக அளவில் அதனை ஏற்றுமதி செய்யலாம் என, இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர். - பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

### மாம்பழக்கூழ் "ஆர்டர்' கிடைத்தும் ஏற்றுமதி செய்ய இயலாமல் பாதிப்பு

தமிழக மாம்பழக் கூழுக்கு, கூடுதலாக, 100 சதவீதம், ஏற்றுமதி ஆர்டர் குவிந்துள்ளது. ஆனால், "பேக்கிங்' செய்ய அரபு நாடுகளில், புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டு உள்ளதால், ஏற்றுமதியில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.உலக அளவில், 63 நாடுகளில், மா மரங்கள் உள்ளன.இந்தியாவில், 1.90 கோடி டன் மாம்பழம் உற்பத்தியாகிறது.தமிழகத்தில், ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 926 ஹெக்டேர் பரப்பில், மா சாகுபடி நடக்கிறது.

**முதலிடம்:**தமிழக அளவில்,மாம்பழ உற்பத்தியில், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள், முதலிடம் வகிக்கின்றன. இங்கு சாகுபடியாகும், தோத்தாபுரி, அல்போன்சா மற்றும் ராஸ்புரி ரகங்கள், 40 சதவீதம் மாம்பழக்கூழ் தயாரிக்க பயன்படுகிறது. மாம்பழக்கூழ் உற்பத்திக்கு, இங்கு, 60 தொழிற்சாலைகள் உள்ளன.

சீசனில், 80 ஆயிரம் டன் மாம்பழங்களில் இருந்து, 40 ஆயிரம் டன், மாம்பழக்கூழ் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், 90 சதவீதம், சவுதி அரேபியா, துபாய், ஏமன், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு, ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும், மாம்பழ பருவ காலத்தில், 75 நாட்கள் மட்டுமே, மாம்பழக்கூழ் தொழிற்சாலைகளில், உற்பத்தி நடக்கும்.

தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட தொழிற்சாலைகளுக்கு, கடந்த ஆண்டு, 75 ஆயிரம் டன் மாம்பழக்கூழ் ஏற்றுமதி செய்ய "ஆர்டர்' கிடைத்தது. இது, இந்த ஆண்டு, ஒரு லட்சத்து 50 ஆயிரம் டன்னாக அதிகரித்துஇருந்தது.

பருவமழை தவறியதால், மாம்பழத்தின் தரம் குறைந்துள்ளது. இதனால், கர்நாடக மாநிலம், கோலார், ஆந்திர மாநிலம், பாங்காரு பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து, மாம்பழங்களை, கொள்முதல் செய்து, தொழிற்சாலைகளுக்கு கொண்டு வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தினமும், 3,000 டன் வரை, இப்படி கொள்முதல் செய்யப்படுகிறது.

**கட்டுப்பாடு:**இப்படி, மாம்பழக்கூழ் தயாரித்த போதிலும், அரபு நாடுகளில், "பேக்கேஜ்' விதிகளில், தகர டப்பாவை பயன் படுத்துவதில், புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதால், பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இதனால், போதுமான, "ஆர்டர்' இருந்தும், ஏற்றுமதியில், பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சில நிறுவனங்கள், 220 முதல் 250 லிட்டர் கொள்ளளவுள்ள, பிளாஸ்டிக் பேரல்களில், மாம்பழக்கூழை நிரப்பி விற்பனைக்கு அனுப்புகின்றன.

***சீனாவில் கிராக்கி:*** சீன இறக்குமதியாளர்கள், தமிழகத்தில் இருந்து, அதிக அளவில், மாம்பழக்கூழ் கொள்முதல் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர். அரபு நாடுகளிலும், தமிழக மாம்பழக்கூழுக்கு, அதிக வரவேற்பு கிடைத்து உள்ளது. புதிய கட்டுப்பாடு காரணமாக, அடுத்த ஆண்டு முதல், பிளாஸ்டிக் பேரல்களில், மாம்பழக்கூழ் அடைத்து, விற்க, உற்பத்தி யாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

- நமது நிருபர்-

தினகரன்

**இன்றைய வேளாணசெய்திகள்**

**29.06.2013**

**அரிசி, பருப்பு, எண்ணெய் வித்து ஆதரவு விலை உயர்வு**



புதுடெல்லி : காரீப் பருவத்தில் அரிசி, பருப்பு, எண்ணெய் வித்துகளின் குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. அரிசியின் குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ.60 உயர்த்தி ரூ.1,310 வழங்க பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக்குழு ஒப்புதல் வழங்கியது.'ஏ' கிரேட் அரிசி குவிண்டாலுக்கு ரூ.65 உயர்த்தி ரூ.1,345 வழங்கப்படும்.

அதேபோல துவரம் பருப்பு ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.450 உயர்த்தி ரூ.4,300 ஆக வழங்கவும், நிலக்கடலை, எள் ஆகியவற்றுக்கு ரூ.300 உயர்த்தி முறையை ரூ.4,000 மற்றும் ரூ.4,500 வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டது. பாசிப்பயறுக்கு ரூ.100 உயர்த்தி ரூ.4,500 வழங்கவும், கம்புக்கு ரூ.75 உயர்த்தி ரூ.1,250 வழங்கவும், மக்காச்சோளத்துக்கு ரூ.135 உயர்த்தி ரூ.1,310 வழங்கவும் அனுமதியளிக்கப்பட்டது

**பால் உற்பத்தியாளர்கள் பராமரிக்கும் கால்நடைக்கு "மானியத்தில்' தீவனம்**

தஞ்சாவூர்: தஞ்சையில், பால் உற்பத்தியாளர்கள் பராமரிக்கும் கால்நடைகளுக்கு கிலோ ஒரு ரூபாய் விலையில், பசுந்தீவனத்தை கால்நடைத்துறை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால், கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளது.

தஞ்சையை அடுத்த வடக்கூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், கால்நடை தீவனம் மானிய விலையில் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில், 100 பால் உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் தீவனங்களை தஞ்சை மண்டல கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் (பொ) சுகுமாறன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கால்நடைத்துறை உதவி இயக்குனர்கள் ரவிச்சந்திரன், நெடுஞ்செழியன், ஆவின் மேலாளர் வெங்கட்ராமன், கால்நடைத்துறை மருத்துவர் ஷெரீப் மற்றும் பால் கூட்டுறவு சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பின்னர், கால்நடைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

தஞ்சை மாவட்டத்தில் வறட்சி நிவாரணத்திட்டத்தில், கால்நடை தீவனத்தை பெருக்கும் வகையில் 50 சதவீத மானிய விலையில், பசுந்தீவன மானிய விலையில், பசுந்தீவன சோளப்பயிர் பயிரிடப்பட்டுள்ளன.

இதன்படி, ஒரு ஏக்கருக்கு 12 ஆயிரத்து 800 ரூபாய் வழங்கப்பட்டது. இதில், 6,400 ரூபாய் மானியம் ஆகும். இத்தகைய உதவியின் மூலம் தஞ்சை மாவட்டத்தில், 700 ஏக்கரில் பசுந்தீவன சோளத்தை விவசாயிகள் பயிரிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது, பசுந்தீவன சோளம் அறுவடை செய்யப்பட்டு, அரசு உத்தரவுப்படி, கிலோ இரண்டு ரூபாய் விலையில் கொள்முதல் செய்யப்படுகிறது.

இதை பால் உற்பத்தியாளர்களுக்கு கிலோ ஒரு ரூபாய் விலையில் (ஒரு ரூபாய் மானியம்) வழங்குகிறோம்.

அரசு திட்டத்தின் மூலம் கால்நடை தீவனம் உற்பத்தி செய்த விவசாயிகளுக்கும் லாபம் கிடைக்கும். பால் உற்பத்தியாளர்கள் பராமரித்து வரும் கால்நடைகளுக்கும் தட்டுப்பாடின்றி தீவனம் கிடைக்க வாய்ப்பு ஏற்படுவதால், பால் உற்பத்தி பெருகும்.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.

**கே.ஆர்.எஸ் அணை நிரம்புகிறது வினாடிக்கு 24 ஆயிரம் கன அடி வருவதால் நீர் மட்டம் உயர்வு**



பெங்களூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால், கே.ஆர்.எஸ். அணைக்கு வினாடிக்கு 24 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது.கர்நாடக மாநிலம் காவிரி டெல்டா பகுதியில் கடந்த ஒருவாரமாக நல்ல மழை பெய்து வருகிறது. அதன் காரணமாக கே.ஆர்.எஸ்., கபினி, ஹாரங்கி, ஹேமாவதி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கே.ஆர்.எஸ். அணைக்கு நீர்வரத்து நேற்று மாலை நிலவரப்படி வினாடிக்கு 24 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. வினாடிக்கு ஆயிரத்து 378 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் உயர்ந்து 89.40 அடியாகவுள்ளது. மொத்தம் 2,284 அடி உயரமுள்ள கபினி அணையில் நேற்று மாலை நிலவரப்படி 2,281.40 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 35 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி வினாடிக்கு 35 ஆயிரம் கன அடி வெளியேற்றப்படுகிறது.

குடகு மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை  பாதித்துள்ளது. தொடர் மழை காரணமாக மொத் தம் 2,859 அடி உயரமுள்ள ஹாரங்கி அணையில் 2,853 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணை முழுமையாக நிரம்ப இன்னும் 5 அடி மட்டுமே பாக்கியுள்ளது. ஹாசன் மாவட்டத்தில் உள்ள ஹேமாவதி அணைக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. மொத்தம் 2922 அடி உயரம் கொண்ட அணையில் 2,883 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது.

**ஒரு முட்டை எடுத்து செல்ல 8 பைசா அங்கன்வாடி மையங்களுக்கு சப்ளை நிறுத்தம்**



நெல்லை:நெல்லை மாநகர பகுதியில் மட்டும் 119 அங்கன்வாடி மையங்கள் உள்ளன. இவற்றில் ஒரு அமைப்பாளர் மற்றும் ஒரு உதவியாளர் பணியாற்றி வருகின்றனர்.

குழந்தைகளை மையத்திற்கு அழைத்து வருவது, சத்துணவு சமைத்து அளிப்பது உள்ளிட்ட பணிகளை இவர்கள் கவனித்து வருகின்றனர். அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு வாரம் 3 முறை தற்போது முட்டை வழங்கப்பட்டு வருகிறது.இம்மையங்கள் அனைத்திற்கும் கடந்த ஏப்ரல் மாதம் வரை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் இருந்து முட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டு வந்தன. மே மாதம் முதல் இந்த முட்டைகளை மையங்களில் பணியாற்றும் உதவியாளர்களே நேரில் வந்து எடுத்து செல்ல வேண்டும் என வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால் உதவியாளர்கள் கடந்த மாதம் முழுவதும் வாரம் ஒருமுறை மையத்திற்கு சென்று முட்டைகளை மொத்தமாக எடுத்து வந்து குழந்தைகளுக்கு வழங்கினர்.இந்நிலையில் மாநகரத்தின் பல பகுதிகளில் உள்ள உதவியாளர்களும் தொடர்ந்து முட்டைகளை பெற்று வருவதில் சிக்கல்களை எதிர்கொண்டனர்.

மேலப்பாளையம், பேட்டை, தச்சநல்லூர் என மாநகரத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் அங்கன்வாடி மையங்கள் உள்ள நிலையில், அவர்கள் தங்கள் பணிகளை ஒத்தி வைத்துவிட்டு பாளையில் உள்ள குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்கு செல்ல வேண்டியதுள்ளது. மேலும் அனைத்து முட்டைகளையும் பஸ்சில் எடுத்து வரும்போது அவை நொறுங்கி கூழாக காட்சியளித்தன.அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ஸீ3 ஆயிரத்திற்கும் குறைவாக ஊதியம் வழங்கப்பட்டு வரும் நிலையில், அவர்களால் ஆட்டோ உள்ளிட்ட வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி முட்டைகளை கொண்டு வர இயலாது. மேலும் குழந்தைகள் பராமரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள அவர்களால் பாளைக்கு சென்று முட்டைகளை எடுத்து வருவதும் இயலாத காரியம். இதனால் சில மையங்களில் கடந்த சில தினங்களாக சத்துணவான முட்டை வழங்க முடியாமல் அங்கன்வாடி ஊழியர்கள் தவிக்கின்றனர்.

இது குறித்து அங்கன்வாடி ஊழியர்கள் கூறுகையில், ‘‘கடந்த இரு மாதங்களாக முட்டைகளை சமாதானபுரத்தில் உள்ள குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் இருந்து எங்களை எடுத்து வர சொல்லுகின்றனர். நாங்கள் எடுத்து வர வாகன வசதிகள் எதுவும் கிடையாது. சில மையங்களில் அங்கன்வாடி உதவியாளர்களே இல்லை. ஒரு மையத்தில் 25 குழந்தைகள் உள்ள நிலையில், சில இடங்களில் இரு மையங்களுக்கு சேர்த்து ஒரு உதவியாளர் உள்ளார். அவர் 3 தினங்களுக்குரிய முட்டைகளை மொத்தமாக

கொண்டு வரவேண்டியதுள்ளது. 2 வயது முதல் 4 வயது குழந்தைகளை பராமரிக்கும் நாங்கள், குழந்தைகளை மையத்தில் விட்டுவிட்டு எப்படி போய் முட்டைகளை எடுத்து வர முடியும்?'' என்றனர்.

என்ன காரணம்?

வாரத்துக்கு 3 முட்டை என அறிவித்த அரசு, அதற்கான நிதி ஒதுக்கீடுகளை தேவையான அளவு செய்யவில்லை. ஒரு முட்டையை கொண்டு போய் மையத்தில் இறக்குவதற்கு அரசு 8 பைசா ஒதுக்குகிறது. இதனபடி 6 ஆயிரம் முட்டைகளை இறக்க ஸீ450 மட்டுமே வாகன வாடகையாக தரப்படுகிறது. ஆனால் முட்டையை எடுத்து செல்ல வரும் ஒப்பந்தக்காரர்களோ 119 மையங்களிலும் முட்டைகளை இறக்கி வைக்க குறைந்தபட்சம் ஸீ3 ஆயிரம் வாடகை கேட்கின்றனர். இதனால் திக்குமுக்காடிய அதிகாரிகள் முட்டைகளை எப்படிபோய் கொண்டு போய் சேர்ப்பது என தெரியாமல் திணறுகின்றனர். நெல்லை புறநகர மையங்களில் அங்கன்வாடி ஊழியர்கள் முட்டைகளை தங்கள் மையங்களில் இறக்க கையில் இருந்து ஸீ100 வரை செலவு செய்து வருகின்றனர்.

**காவிரியில் நீர்வரத்து அதிகரித்தது 35,000 கனஅடியை தாண்டியது ஒகேனக்கல்லில் வெள்ளம்**



பென்னாகரம்: கர்நாடகாவில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. கபினி, ஹேமாவதி, ஹேரங்கி ஆகிய அணைகள் நிரம்பியதால் காவிரி ஆற்றில் உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது. கடந்த 26ம் தேதி முதல் கபினி அணையில் இருந்து வினாடிக்கு 30 ஆயிரம் கனஅடிக்கும் மேல் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இதனால், தமிழகத்திற்கு வரும் தண்ணீரின் அளவும் படிப்படியாக உயர்ந்தது. நேற்று முன்தினம் காலை தமிழக & கர்நாடக எல்லையான பிலிகுண்டுலு பகுதியில் விநாடிக்கு 6,200 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அன்று மாலை 6 மணிக்கு

தண்ணீர் வரத்து மேலும் அதிகரித்து விநாடிக்கு 10,000 கனஅடியானது.இதனால், ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகளுக்கு பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. நேற்று முன்தினம் மதியம் முதல் சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படவில்லை. நேற்று அதிகாலை 3 மணியளவில் விநாடிக்கு 20,000 கன அடி தண்ணீர் வர தொடங்கியது. படிப்படியாக மேலும் அதிகரித்து காலை 10 மணிக்கு 30 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. அருவிக்கு செல்லும் நடைபாதையை மூழ்கடித்து தண்ணீர் சீறி பாய்ந் தது. பாதுகாப்பு கருதி நடைபாதை பகுதியில் கயிறு கட்டி இரும்பு தடுப்பு வைக்கப்பட்டது. போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டது. நேற்று காலை 6 மணிக்கு தொங்கு பாலத்திற்கும் சீல் வைக்கப்பட்டது.

அருவிகளில் குளிக்க 2ம் நாளாக நேற்றும் தடை நீடித்தது.ஒகேனக்கல்லில் மாமரத்துகடவு, கோத்திகல் பரிசல் துறைகளில் இருந்து பரிசல் ஓட்ட தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஊட்டமலை பரிசல்துறை முதல் ஒகேனக்கல் சத்திரம் வரை தற்போது பரிசல் ஓட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தொடர்ந்து நீர்வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் இங்கும் பரிசல் ஓட்ட தடை விதிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.பிலிகுண்டுலுவில் மத்திய நீராணைய அதிகாரிகள் நேற்று மாலை 3 மணியளவில் எடுத்த கணக் கெடுப்பில் நீர்வரத்து விநாடிக்கு 35,000 கனஅடியாக இருந்தது. காவிரியாற்றில் நீர்வரத்து அதிகரித்திருப்பதால் மேட்டூர் அணையும் வேகமாக நிரம்பி வருகிறது. நீரில் மூழ்கும் பயிர்கள்: நீர் வரத்து அதிகரிப்பால் மேட்டூர் அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால், நீர்தேக்க பகுதியில் பண்ணவாடி, கோட்டையூர் காவிரி கரையோரத்தில் விவசாயிகள் பயிரிட்டிருந்த சோளம், கம்பு, எள் உள்ளிட்ட பயிர்களும் நீரில் மூழ்கி வருகின்றன. கம்பு, சோளம் ஆகிய பயிர்கள் அறுவடைக்கு இன்னும் 9 நாட்களே உள்ள நிலையில், கால்நடை தீவனத்துக்காக விவசாயிகள் மும்முரமாக அறுவடையில் ஈடுபட்டுள்ளனர். தண்ணீர் வரத்து அதிகரிப்பால், மீனவர்களும் நேற்று 4வது நாளாக மீன்பிடிக்க செல்லவில்லை.

**வெப்ப சலனத்தால் தமிழகத்தில் மழை**



சென்னை : தமிழகத்தில் நிலவும் வெயில் காரணமாக வெப்ப சலனம் ஏற்பட்டு வளிமண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இதையடுத்து தமிழகத்தில் இன்று ஒரு சில இடங்களில் மழை பெய்யும். வெப்ப சலனம் ஏற்பட்டு வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவானதால் தமிழகம் புதுச்சேரியில் நேற்று ஒரு சில இடங்களில் இடியுடன் மழை பெய்தது. அதிகபட்சமாக மயிலாடுதுறையில் 100 மிமீ மழை பெய்துள்ளது. சென்னை விமான நிலையம், செங்கல்பட்டு, மாமல்லபுரம் 20 மிமீ மழை பெய்துள்ளது.

இந்நிலையில், வளி மண்டல காற்று சுழற்சி தொடர்ந்து நீடிப்பதால் இன்றும் தமிழகம் புதுச்சேரியில் இடியுடன் மழை பெய்யும். தமிழகத்தில் பரவலாக 100 டிகிரி வரை வெயில் இருக்கும். சென்னையில் நேற்று 101 டிகிரி வெயில் காணப்பட்டதால் வெப்ப சலனம் ஏற்பட்டு மாலையில் திடீரென இடியுடன் மழை பெய்தது. இன்றும் சென்னையில் 100 டிகிரி வரை வெயில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாலை, நேரத்தில் இடியுடன் மழை பெய்யும்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 29.06.2013

**சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் தேயிலை நாற்றுக்கள் வினியோகம் தோட்டக்கலை துணை இயக்குனர் தகவல்**

ஊட்டி,

சிறு தேயிலை விவசாயிகளுக்கு மானிய விலையில் தேயிலை நாற்றுக் கள் வினியோகம் செய்யப் பட்டு வருவதாக தோட் டக்கலை துணை இயக்கு னர் மணி தெரிவித்தார்.

தேயிலை நாற்றுக்கள் வினியோகம்

நீலகிரி மாவட்டத்தில் தற் போது தென் மேற்கு பருவ மழை தீவிரமாக பெய்து வருகி றது. இதையடுத்து, மாவட்டத் தில் உள்ள சிறு தேயிலை விவ சாயிகளுக்கு தோட்டக் கலைத் துறை சார்பில் மானிய விலை யில் நாற்றுக்கள் வழங்கப் பட்டு வருவதாக தோட்டக் கலை துணை இயக்குனர்மணி தெரிவித்தார். இது குறித்து அவர் கூறியதாவது:

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயி கள் தங்கள் நிலத்தில் தேயிலை பயிர் செய்ய மலைப்பகுதிமேம் பாட்டு திட்டம் மூலம் மானிய விலையில் 5 லட்சம் தேயிலை நாற்றுக்கள் வழங்கப்படுகிறது.இந்த தேயிலை நாற்றுகள் உற் பத்தி செய்ய 4 ரூபாய் செல வாகிறது.

50 சதவீத மானிய விலையில் நாற்றுக்கள்

இந்த தேயிலை நாற்றுக்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப் படுகிறது. மேலும் தேயிலை விவசாயத் தில் ஊடு பயிராக பயிர் செய்ய பிளம்ஸ், ஆரஞ்சு, பேரி, பீச் பழ நாற்றுகள் 50 சதவீத மானிய விலை யில் வழங்கப்படு கிறது. இதற்காக 30 ஆயிரம் பழக்கன்றுகள் தயார் நிலை யில் வைக்கப்பட்டு உள்ளது.

கூடலூர் பகுதியில் சாகுபடி செய்யப்படும் மிளகு, கிராம்பு, ஜாதிக்காய் நாற்றுகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதற்காக 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட நாற்றுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளது. எனவே, சிறு விவசாயிகள் அந் தந்த பகுதி தோட்டக்கலை அதிகாரிகளிடம் தங்களது நில ஆவ ணங்களை பதிவு செய்து மானிய விலையில் தேயிலை மற்றும் பழக்கன்றுகளை பெற்று கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறி னார்

**கூடலூர் நகராட்சி பகுதியில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை செயல்படுத்த ரூ. 5 லட்சம் ஒதுக்கீடு நகர சபை கூட்டத்தில் ஒப்புதல்**

கூடலூர்,

கூடலூர் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங் களில் மழைநீர்சேகரிப்பு திட்டம் செயல்படுத்த ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய நகரசபை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

<u>நகர சபை கூட்டம்</u>

கூடலூர் நகராட்சி அலுவல கத்தில் உள்ள மன்ற அரங்கில் நகர சபை கூட்டம் நடைபெற் றது. இந்த கூட்டத்துக்கு நகர சபை தலைவர் ரமா தலைமை தாங்கினார். இதில், கமிஷனர் மணி, மேலாளர் நஞ்சுண்டன், துணை தலைவர் ராஜா தங்க வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக மன்ற ஒப்பு தலுக் கான தீர்மானங்கள் வாசிக்கப் பட்டது.

<u>நகராட்சி கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு திட்டம்</u>

அப்போது கூடலூர் சுங்கம் மீன் மார்க்கெட்டுக்கு அருகே உள்ள கட்டண கழிப் பிடம் ரூ.12 ஆயிரத்துக்கு ஏலம் போனதை அங்கீரிப்பது என தீர்மானிக்கப்பட்டது. மழைநீர் சேகரிப்பு திட் டத்தை தமிழகம் முழுவதும் தீவிரமாக அமல்படுத்துமாறு தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது. இதனால் கூடலூர் நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை முறையாக அமல்படுத்துவது என்றும், இதற்காக ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

<u>சோலார் கருவிகள்</u>

இதேபோல் நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டி டங்களிலும் மின்சாரத் துக்கு பதிலாக சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்து பயன்படுத்தும் வகையில் ரூ.7 லட்சம் செல வில் 5 கே.வி. சக்தி சோலார் கருவிகள் பொருத்துவது உள் பட 14 தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டது.

**அமராவதி அணையில் இருந்து 8 பழைய வாய்க்காலுக்கு தண்ணீர் திறப்பு 7 ஆயிரத்து 520 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்**

தளி,

அமராவதி அணையில் இருந்து 8 பழைய வாய்க்காலுக்கு தண்ணீர் நேற்று திறந்து விடப்பட்டது. இதன் மூலம் 7 ஆயிரத்து 520 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

<u>அமராவதி அணை</u>

திருப்பூர் மாவட்டம், உடுமலையை அடுத்த அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்கள் உட்பட்ட பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேலும் இந்த அணை முக்கிய குடிநீர் ஆதாரமாகவும் உள்ளது. அமராவதி அணையின் மொத்த நீர் மட்ட உயரம் 90 அடியாகும். அணையின் மொத்த கொள்ளளவு 4 ஆயிரத்து 47 மில்லியன் கனஅடியாகும். அமராவதி அணைக்கு கேரளாவில் இருந்து பாம்பாறு, சின்னாறு மற்றும் தேனாறு மூலம் தண்ணீர் வருகிறது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்தால் அமராவதி அணை தண்ணீர் இன்றி வறண்டு விட்டது. இதை தொடர்ந்து இந்த ஆண்டு கேரளாவில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்தது. அதோடு அமராவதி அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் நல்ல மழை பெய்தது. இதனால் அமராவதி அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியது. இதன் காரணமாக நீர் மட்டம் உயர தொடங்கியது. அணையில் நீர்மட்டம் உயர்ந்ததை அறிந்த விவசாயிகள் தங்கள் நிலம் பாசன வசதி பெற தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று முதல்அமைச்சர் ஜெயலலிதாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

<u>தண்ணீர் திறப்பு</u>

அதனை ஏற்று அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு உட்பட்ட குமரலிங்கம், கணியூர், சர்க்கார் கண்ணாடிபுத்தூர், சோழமாதேவி, கடத்தூர்,

காரத்தொழுவு ஆகிய 6 ராஜ வாய்க்கால்கள் மற்றும் கல்லாபுரம், ராமக்குளம் வாய்க்கால் கள் ஆகிய 8 பழைய வாய்க் கால்களுக்கு தண்ணீர் திறந்து விட தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதற் கான நிகழ்ச்சி நேற்று காலை 9 மணி அளவில் அமராவதி அணை பகுதியில் நடை பெற்றது. இதில் தமிழக வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் கலந்து கொண்டு ஆற்று மதகு பொத்தனை அழுத்தி அணையில் இருந்து ஆற்றுக்கு தண்ணீரை திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு ஆற்றில் மலர் தூவப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ஜி.கோவிந்தராஜ், உடுமலை ஆர்.டி.ஓ. லதா, சி.சண்முகவேலு எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எம்.சண்முகம், ஒன்றிய குழு தலைவர்கள் அண்ணாத்துரை, ராஜலட்சுமி ரங்கசாமி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் முத்தமிழ்செல்வன், உதவி செயற்பொறியாளர் முத்துச்சாமி, இளம்பொறியாளர் தர்மன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

<u>7ஆயிரத்து 520 ஏக்கர் நிலம்</u>

8 வாய்க்கால்களுக்கும் இடைவெளி விட்டு 135 நாட்களுக்கு 300 கன அடி வீதம் 2 ஆயிரத்து 462.40 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த தண்ணீர் திறப்பின் மூலம் உடுமலை தாலுகாவில் 1450 ஏக்கர் விளை நிலங்களும், மடத்துக்குளம் தாலுகாவில் 6 ஆயிரத்து 70 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும். நேற்றைய நிலவரப்படி அமராவதி அணையின் நீர் மட்டம் 48.39 அடியாகவும், அணையில் 1,096.63 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது, அணைக்கு வினாடிக்கு 1,132 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அமராவதி அணில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு பிரதான வாய்க்காலில் வினாடிக்கு 440 கன அடியும், அமராவதி ஆற்றில் வினாடிக்கு 1,250 கன அடியும், கல்லாபுரம், ராமக்குளம் வாய்க்காலில் வினாடிக்கு தலா 25 கன அடியும் என மொத்தம் வினாடிக்கு 1,740 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.